மல்கியா 4:2
யோவான் 17:17
நீதியின் சூரியன் உதிக்கும்
அதின் செட்டைகளின்கீழ் ஆரோக்கியம் இருக்கும்
உம்முடைய வசனமே சத்தியம்

# புது உடன்படிக்கை

மில்லினிய வேதாகம சத்திய இயக்கம்

*Vol. 108* பிப்ரவரி *2025*

## ஈசாக்கின் சேஷ்ட புத்திர பாக ஆசீர்வாதம் - அடையாளம் மற்றும் நிஜ நிறைவேறுதல்

***PT# 455, Sept-Oct 1961 pp. 68-71***

**ஆதி. *26:34 - 27:45***

*1.* இந்த ஆய்வு ஆதி. *25:34* வசனத்தின் விவரத்துடன் தொடர்புடையதாயிருக்கிறது. இதில் ஏசா மற்றும் யாக்கோபு பற்றிய காரியங்கள் தொடர்ந்து பதிவு செய்யப்படுகின்றன. அதில் நாம் பின்வரும் நிகழ்வுகளைக் காண்கிறோம்: *(1)* இரு புறஜாதி பெண்களுடன் ஏசாவின் விவாகம், *(2)* முதல் பிறப்புரிமையின் ஆசீர் - வாதத்தை ஈசாக்கு யாக்கோபுக்கு அளிப்பது, *(3)* அதின் விளைவாக ஏசாவுக்கு வந்த கோபம் மற்றும் யாக்கோபுடன் பகைமை, *(4)* ஆரானுக்குத் தப்பி ஓட ரெபெக்காள் யாக்கோபுக்குக் கொடுத்த அறிவுரை.

*2.* ஆதி. *26:34,35* ஏசா நாற்பது வயதானபோது, ஏத்தியனான பெயேரியினுடைய குமாரத்தியாகிய யூதீத்தையும், ஏத்தியனான ஏலோனுடைய குமாரத்தியாகிய பஸ்மாத்தையும் விவாகம்பண்ணினான். அவர்கள் ஈசாக்குக்கும் ரெபெக்காளுக்கும் மனநோவாயிருந்தார் - கள். பெயரளவிலான மாம்ச இஸ்ரயேலர்கள் யூத யுகத்தின் ஆரம்ப காலத்தில் சோதனை மயமான சில அனுபவங்களைப் பெற்றார்கள். அதற்குப்பிறகு அவர்கள் தங்களை இரு காரியங்களுடன் இணைத்துக் கொண்டார்கள்:*(1)* சடங்காச்சாரமான விக்கிரக ஆரா - தனையுடைய முறைக்கேடான காரியங்கள் [யாத். *32:8,9;33:3,5* வசனங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கவும் – ஏத்தியனான பெயேரியினுடைய குமாரத்தியாகிய யூதீத்தையும்]; *(2)* உலகத்தனமான ஆவி [ஏத்தியனான ஏலோனுடைய குமாரத்தியாகிய பஸ்மாத்தையும்]. சுயநலத்தினால் [நிஜ நிறைவேறுதலான ஏத்தியர்கள் - *E Vol. 9, p. 205*] உருவான இந்த இரு தீய பண்புகள் பெயரளவிலான மாம்ச இஸ்ரயேலர்களுடன் இணைவதென்பது, தேவனுடைய அன்பெனற இயல்பில் அவருக்கும் (ஈசாக்கு), மாம்ச இஸ்ரயேல் மற்றும் ஆவிக்குரிய இஸ்ரயேலின் வீட்டாரை அபிவிருத்தி செய்வதற்காக ஆபிரகாமின் வாக்குத்தத்தங்களைப் பிரயோகித்தவர்களில் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்ட அந்த வாக்குத்தத்தங்களுக்கும் (ரெபெக்காள்)அதிக மனநோவை உண்டாக்கினது.

*3.* ஆதி. *27:1-5* ஈசாக்கு முதிர்வயதானதினால் அவன் கண்கள் இருளடைந்து பார்வையற்றுப் போனபோது, அவன் தன் மூத்த குமாரனாகிய ஏசாவை



அழைத்து, என் மகனே என்றான்; அவன், இதோ, இருக்கிறேன் என்றான். அப்பொழுது அவன்: நான் முதிர்வயதானேன், என் மரணம் இன்ன நாளில் என்று அறியேன். ஆகையால், நீ உன் ஆயுதங்களாகிய உன் அம்பறாத்தூணியையும் உன் வில்லையும் எடுத்துக் கொண்டு வனத்துக்குப்போய், எனக்காக வேட்டையாடி, அதை எனக்குப் பிரியமாயிருக்கிற ருசியுள்ள பதார்த்தங்களாகச் சமைத்து, நான் புசிக்கவும், நான் மரணமடையுமுன்னே என் ஆத்துமா உன்னை ஆசீர்வதிக்கவும், என்னிடத்தில் கொண்டுவா என்றான். ஈசாக்கு தன் குமாரனாகிய ஏசாவோடே பேசுகையில், ரெபெக்காள் கேட்டுக்கொண்டிருந்தாள். ஏசா வேட்டையாடிக் கொண்டுவரும்படி வனத்துக்குப் போனான். ஈசாக்கின் தகப்பனின் சரித்திரத்திலிருந்து

## தூது நிரல்

*1.* ஈசாக்கின் சேஷ்ட புத்திர பாக ஆசீர்வாதம் ...............*1*
*2.* கூடுதலான பலத்தைப் பெற்றுக் கொள்வதற்காக (ஸ்திரப்படுத்தப் படுவதற்காக) தேவனுக்குக் காத்திருந்து திடமனதாயிருப்பது...............................*10*

தனிப்பட்ட ஒன்றாக ஆதி. 25:21-34 வரையுள்ள வசனங்களில் பதிவு செய்யப்பட்ட ஈசாக்கின் சரித்திரத்தில், ஈசாக்குத் தேவனுடைய அன்பென்ற இயல்பில் அவரை அடையாளப்படுத்துகிறார் என்று நாம் ஏற்கனவே கற்றுக் கொண்டோம். ஆனால் ஆதி. 27: 1-ம் வசனம் முதற்கொண்டு பார்வையற்று போன நிலையில் ஈசாக்குத் தேவனுடைய அன்பென்ற இயல்புக்குக் கூடுதலாகத், தம்முடைய ஜனங்களைத் தெரிந்து கொள்ளுவதில் தேவன் வெளிப்படுத்துகிற பட்சபாதமின்மை என்ற இயல்பில் அவரை இன்னும் விசேஷமாக அடையாளப் படுத்துகிறார்.

4. இதைப் பாஸ்டர் ஜான்சன் *E. Vol. 10*, பக்.609-ல் காண்பிக்கிறார். மாம்ச இஸ்ரயேலர்களை அடையாளப்படுத்தும் ஏசா ஆவிக்குரிய தெரிந்து கொள்ளப்படுதலிலிருந்து புறக்கணிக்கப்படுவது மற்றும் ஆவிக்குரிய இஸ்ரயேலர்களை அடையாளப்படுத்துகிற யாக்கோபு ஆவிக்குரிய தெரிந்து கொள்ளப்படுதலுக்கு, ஏற்றுக் கொள்ளப்படுவது என்ற கண்ணோட்டத்திலிருந்து (ரோம. 9:10-13), பாஸ்டர் ஜான்சன் இவ்வாறு கூறுகிறார்: சுவிசேஷ யுக தெரிந்து கொள்ளப்பட்ட வகுப்பாராக இருப்பதற்கு மாம்ச இஸ்ரயேலர்களுக்கு முதல் சந்தர்ப்பம் கொடுக்கப்பட்டிருந்தாலும் எந்த வகுப்பாரைக் கர்த்தர் தெரிந்து கொள்ளப்பட்ட வகுப்பாராக ஆக்குவார் என்பது சம்பந்தமாகத் தேவனுடைய பட்சபாதமின்மை என்ற இயல்பில் அவரைப் பார்வையற்று போன ஈசாக்கு அடையாளப்படுத்துகிறார். ஆவிக்குரிய இஸ்ரயேலர்களுக்கு அதிக தயவைக் காண்பித்தவைகளாக ஆவிக்குரிய வாக்குத்தத்தங்களையும் அவைகளைப் பிரயோகிப்பவர்களையும் ரெபெக்காள் அடையாளப்படுத்துகிறாள். மேலும் *E. Vol.6*, பக்கம் 368 மற்றும் *E.Vol. 8*, பக்கம் 7-ல் பாஸ்டர் இவ்வாறு கூறுகிறார். இந்த சூழ்நிலையில் ஏசா பெயரளவிலான மாம்ச இஸ்ரயேலர்களை அடையாளப்படுத்துகிறார். ஆகையால் இதற்கிணக்கமாக, இந்த கண்ணோட்டத்திலிருந்து நாம் ஆதி.27-ம் அதிகாரத்தைக் கருத்தில் கொள்வோம்.

5. சுவிசேஷ யுகத்தின் முடிவில், விசேஷமாக யோவான் ஸ்நானனின் ஊழியத்தின் மூலம், தெரிந்து கொள்ளுதல் சம்பந்தமாகத் தேவன் பட்சபாதமற்றவராகச் செயல்பட்டு (ஈசாக்கு … கண்கள் இருளடைந்து), பெயரளவிலான மாம்ச இஸ்ரயேலர்களின் (ஏசா) விசேஷித்த கவனத்தைக் கோரினார் (ஏசாவை அழைத்து). அவர்களும் அதற்குப் பிரதிகிரியை செய்தார்கள் (இதோ, இருக்கிறேன் என்றான் - மத். 3:5). அவர் மாம்ச இஸ்ரயேலர்களுக்கு, விசேஷமாக அவர்களுடைய தலைவர்களுக்குப் பின்வரும் காரியங்களைச் சுட்டி காட்டினார்: (1) தேவனுடைய அன்பென்ற இயல்பிலும், தெரிந்து கொள்ளப்படுதல் சம்பந்தமாகப் பட்சபாதமின்மை என்ற இயல்பிலும் அவர் நீண்ட காலமாகச் செயல்பட்டுக் கொண்டு வருகிறார் (நான் முதிர்வயதானேன்), (2) அவர் (தம்முடைய ஊழியக்காரர்களில் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டவராக) தெரிந்து கொள்ளப்படுதல் சம்பந்தமாக பட்சபாதமற்றவராக இன்னும் எவ்வளவு காலம் செயல்படக் கூடுமென்று அறியாதிருந்தார் (என் மரணம் இன்ன நாளில் என்று அறியேன்), (3) ஆகையால் அவர்கள் தங்களை ஆயத்தப்படுத்திக் கொண்டு, தங்களுடைய செயல் எல்லைக்குள் முன்னேறி (வனத்துக்குப்போய்) தேவனுக்கு பிரியமான ஒரு விசேஷித்த காணிக்கையைக் கொண்டு வர நாட வேண்டுமென்றும், சரியாக ஆயத்தப் படுத்தப்பட்டு அன்பான அர்ப்பணிப்புடன் நிறைந்த இருதயங்களுடன் அதைக் கொண்டு வர வேண்டும் (எனக்குப் பிரியமாயிருக்கிற ருசியுள்ள பதார்த்தங்களாகச் சமைத்து ... என்னிடத்தில் கொண்டுவா; மத். 3:5-12 வசனங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கவும்), (4) அவர்கள் அவ்வாறு செய்தால், தேவன் தம்முடைய பிரதான (ஆவிக்குரிய) தெரிந்து கொள்ளப்படுதலின் வேலை (யூதர்களுக்கு விசேஷ அழைப்பு சம்பந்தமாக) முடிவடைவதற்கு முன்பு (மரணமடையுமுன்னே), அவர் அந்த காணிக்கையைத் தமக்குரியதாக்கிக் கொண்டு (நான் புசிக்கவும்), தம்முடைய பிரதான (ஆவிக்குரிய) உடன்படிக்கையின் ஆசீர்வாதத்தை அவர்களுக்கு அளிக்கக் கூடும் (என் ஆத்துமா உன்னை ஆசீர்வதிக்கவும்). நிச்சயமாக, ஆவிக்குரிய வாக்குத்தத்தங்களைப் பிரயோகிப்பவர்களில் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்ட அந்த வாக்குத்தத்தங்களும் (ரெபெக்காள்), பெயரளவிலான மாம்ச இஸ்ரயேலர்களுக்குத் தேவன் கொடுத்த இந்த கிருபையான வாய்ப்பைக் குறித்துக் கேள்விப்பட்டார்கள் (யாத். 19:4-8; உபா. 7:6-9; 10:15; சங்.135:4 வசனங்களுக்கு இணக்கமாகத் தேவன் இதைக் கொடுத்தார் - ரெபெக் - காள் கேட்டுக்கொண்டிருந்தாள்). மேலும் பெயரளவிலான மாம்ச இஸ்ரயேலர்கள் தங்களுடைய செயல் எல்லையிலிருந்து தேவனுக்குப் பிரியமான ஒரு காணிக்கையைக் கண்டுக்கொள்வதற்காகவும், அதைக் கொண்டுவருவதற்காகவும் செய்த முயற்சிகளை, அந்த வாக்குத்தத்தங்களைப் பிரயோகிப்பவர்கள் அறிந்திருந்தார்கள் (ஏசா வேட்டையாடிக் கொண்டுவரும்படி வனத்துக்குப் போனான்).

## யாக்கோபு ஆசீர்வதிக்கப்படுவதை ரெபெக்காள் நாடுவது

6. ஆதி. 27:6,7 <u>அப்பொழுது ரெபெக்காள் தன் குமாரனாகிய யாக்கோபை நோக்கி: உன் தகப்பன் உன் சகோதரனாகிய ஏசாவை அழைத்து: நான் புசித்து, எனக்கு மரணம் வருமுன்னே, கர்த்தரை முன்னிட்டு உன்னை ஆசீர்வதிக்கும்படி, நீ எனக்காக வேட்டையாடி, அதை எனக்கு ருசியுள்ள பதார்த்தங்களாகச் சமைத்துக் கொண்டுவா என்று சொல்லக்கேட்டேன்.</u> யூத யுக அறுவடையின் ஆரம்ப காலத்தில், உடன்படிக்கை வாக்குத்தத்தங்களை உயர்வாக மதித்து, தேவனுடைய விசேஷித்த உடன்படிக்கையின் தயவை உண்மையாக விரும்பின உத்தம இஸ்ரயேலர்கள் (யாக்கோபு) இருந்தார்கள். அவர்கள் வருங்காலத்தில் ஆவிக்குரிய இஸ்ரயேலின் அங்கத்தினர்களாக இருக்க போகிறவர்களாக இருந்தார்கள். யூதயுக ஆரம்ப காலத்தில் ஆவிக்குரிய வாக்குத்தத்தங்களைப் பிரயோகிப்பவர்களில் பிரதிநிதித்துவப்படுத் - தப்பட்ட அந்த வாக்குத்தத்தங்கள் (ரெபெக்காள்) உத்தம இஸ்ரயேலர்களுக்குப் பின்வரும் காரியத்தை உறுதியாகத் தெரிவித்தன. தம்முடைய அன்பென்ற இயல்பிலும், தெரிந்து கொள்ளப்படுதல் சம்பந்தமாகப் பட்சபாதமின்மை என்ற இயல்பிலும் செயல்படுகிற தேவன் (ஈசாக்கு), பெயரளவிலான மாம்ச இஸ்ரயேலர்கள் (ஏசா) அவருக்கொரு விசேஷமான மற்றும் அவருக்குப் பிரியமான காணிக்கையைக் கொண்டுவருவதை விரும்பினதாகப் பெயரளவிலான மாம்ச இஸ்ரயேலர்களுக்கு, விசேஷமாக அதின் தலைவர்களுக்குத் தெரிவித்திருந்தார். மேலும் தேவனுடைய ஞானம், நீதி மற்றும் வல்லமைக்கு இணக்கமாக அவர் தம்முடைய பிரதான உடன்படிக்கை ஆசீர்வாதத்தை அவர்களுக்கு அளிக்க ஆயத்தமுள்ளவராக இருப்பதற்கு முன்பும், அதின் சம்பந்தமாக அவரு

டைய தெரிந்து கொள்ளப்படுதலின் வேலையை முடிப்பதற்கு முன்பும் அந்த காணிக்கையைத் தமக்குரியதாக ஆக்கிக் கொள்வார்.

*7. ஆதி. 27:8* <u>ஆகையால், என் மகனே, என் சொல்லைக் கேட்டு, நான் உனக்குக் கற்பிக்கிறபடி செய்.</u> இந்த வாக்குத்தத்தங்களைப் பிரயோகிப்பவர் - களில் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்ட அந்த வாக்குத்தத் தங்கள் (ரெபெக்காள்), பெயரளவிலான மாம்ச இஸ்ர - யேலர்கள் (ஏசா),விசேஷமாக அதின் தலைவர்கள் இந்த மேன்மையான ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்வதை விரும்பாதிருந்தன. ஏனென்றால் அவர்கள் அதற்கு அபாத் திரராக இருப்பதையும் அதற்குரியவர்களாக இல்லாத தையும் அவர்கள் உணர்ந்தார்கள். ஆகையால் உடன் படிக்கை வாக்குத்தத்தங்களை மிக உயர்வாக மதித்தவர் களுக்கு (யாக்கோபு)மட்டுமே, அதாவது ஆவிக்குரிய இஸ்ரயேலர்களாக இருக்க போகிறவர்களுக்கு மட்டுமே அந்த ஆசீர்வாதம் அளிக்கப்பட வேண்டுமென்று அவர் கள் உண்மையாக விரும்பினார்கள். இந்த விருப்பத்தை நிறைவேற்றுவதற்கு அவர்களொரு திட்டத்தை வைத் - திருந்தார்கள். ஆவிக்குரிய இஸ்ரயேலர்களாக இருக்க போகிறவர்கள் இந்த வாக்குத்தத்தங்கள் குறிப்பிடுகிற தெய்வீக கட்டளைகளுக்கும், கொள்கைகளுக்கும், கோரிக்கைகளுக்கும் கண்டிப்பாகக் கீழ்ப்படிய வேண்டு மென்று அவர்களுக்கு அறிவுறுத்தினார்கள்.

*8. ஆதி. 27:9* <u>நீ ஆட்டுமந்தைக்குப் போய், இரண்டு நல்ல வெள்ளாட்டுக்குட்டிகளைக் கொண்டுவா; நான் அவைகளை உன் தகப்பனுக்குப் பிரியமானபடி ருசியுள்ள பதார்த்தங்களாகச் சமைப்பேன்.</u> சுருக்கமாகக் கூறினால், இந்த மேன்மையான ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்வதற்காக மரணபரியந்தம் பிரதிஷ்டை செய்ய வேண்டுமென்று அவர்கள் திட்டமிட்டார்கள் (ரெபெக்காள் வகுப்பார்). உடன்படிக்கையின் வாக்குத்தத் தங்களை உயர்வாக மதித்திருந்த இந்த உத்தம இஸ்ர - யேலர்களை (யாக்கோபு - முதற் பேறானவர்களின் சபையைச் சேர்ந்தவர்களாயிருக்க ஆவலாக விரும்பின உத்தம இஸ்ரயேலர்கள்) பின்வரும், காரியங்களைச் செய்ய அழைத்தார்கள்: (1) தேவ ஆட்டுக்குட்டியாகிய யெஷுஆவை (முதலாம் வெள்ளாட்டுக்குட்டி) விசுவாசத் தின் மூலம் தங்களுக்குரியவராக ஆக்கிக் கொள்ள வேண்டும் (யோவா.1:29;6:53-58), (2) கர்த்தராகிய யெஷுஆவுக்குள் விசுவாசம் வைக்கிறவர்களாகத் தங்களுடைய மனுஷீகத்தை (இரண்டாம் வெள்ளாட்டுக் குட்டி) பிரதிஷ்டைக்குக் கொண்டு வர வேண்டும். நிஜ நிறைவேறுதலான ரெபெக்காளின் உதவியுடன் அவர் களுடைய மனுஷீகத்தைச் சரியாக ஆயத்தம் செய்து (ருசி யுள்ள பதார்த்தங்களாகச் சமைப்பேன்), தெரிந்து கொள்ளப்படுதல் சம்பந்தமாகப் பட்சபாதமின்மை என்ற இயல்பில் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்ட தேவனுக்குச் (ஈசாக்குக்கு)செலுத்தப்பட்டால், அது அவருக்கு மிகவும் பிரியமாயிருக்கும். மேலும் அது அவருடைய விருப்பத் திற்கு இணக்கமாயிருக்கும்.

*9. ஆதி. 27:10* <u>உன் தகப்பன் தாம் மரணமடையு முன்னே உன்னை ஆசீர்வதிக்கும்படி அவர் புசிப்பதற்கு நீ அதை அவரிடத்தில் கொண்டுபோகவேண்டும் என் றாள்.</u> தெரிந்து கொள்ளப்படுதல் சம்பந்தமாகப் பட்சபாத மின்மை என்ற இயல்பில் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்ட தேவனுக்கு (ஈசாக்குக்கு) இந்த காணிக்கைகள் செலுத்தப் பட வேண்டும் (மத்.16:24,25;26:27; ரோம.12:1; எபி.13:13). அப்போது அது அவருக்குச் சுகந்த வாசனையான காணிக்கையாக இருக்கும் (எபே. 5:2). அவர் அதில் மிகவும் பிரியமாயிருப்பார். மேலும் தமது தயவுள்ள சித்தத்தின்படி, அதை பாவ நிவாரண பலியின் ஒரு பாகமாக ஏற்றுக் கொண்டு, தம்முடைய சொந்த உபயோகத்திற்கு அதைத் தமக்குரியதாக ஆக்கிக் கொள் வார் (அவர் புசிப்பதற்கு….). அதின் விளைவாக, அவர் தம்முடைய ஆவிக்குரிய தெரிந்து கொள்ளுதலின் வேலையை (யூதர்களுக்கு விசேஷ அழைப்பு சம்பந்தமாக) முடிவுக்குக் கொண்டு வருவதற்கு முன் (தாம் மரண மடையுமுன்னே) தம்முடைய உடன்படிக்கையின் பிரதான ஆசீர்வாதத்தினால் அவர்களை ஆசீர்வதிக்கக் கூடும்.

*10. ஆதி. 27:11* <u>அதற்கு யாக்கோபு தன் தாயாகிய ரெபெக்காளை நோக்கி: என் சகோதரனாகிய ஏசா ரோமம் மிகுந்தவன், நான் ரோமமில்லாதவன்.</u> இந்த உத்தம இஸ்ரயேலர்களிடம் (யாக்கோபு) இல்லாத சில விசே ஷித்த அதிகாரங்களும் முன்னுரிமைகளும் (ரோமம்) பெயரளவிலான மாம்ச இஸ்ரயேலர்களிடம் (ஏசா - விசேஷமாக அதின் தலைவர்களிடம்) இருந்தன. எடுத்துக் காட்டாக தேவனுடைய அடையாளமான ஆசாரியத்துவ மாக இருக்கும் சிலாக்கியம் பெயரளவிலான மாம்ச இஸ்ரயேலர்களின் தலைவர்களுக்குரியதாக இருந்தது. பொதுவாக உத்தம இஸ்ரயேலர்கள் அந்த ஆசாரியத் துவத்தின் பாகமாக இருக்க முடியாது.

*11. ஆதி. 27:12* <u>ஒருவேளை என் தகப்பன் என்னைத் தடவிப்பார்ப்பார்; அப்பொழுது நான் அவருக்கு எத்தனாய்க் காணப்பட்டு, என்மேல் ஆசீர் வாதத்தை அல்ல, சாபத்தை வரப்பண்ணிக்கொள்வேனே என்றான்.</u> உத்தம இஸ்ரயேலர்கள் (யாக்கோபு)அதை உணர்ந்து, அதை அங்கீகரிப்பதாக ஆவிக்குரிய வாக்குத் தத்தங்களைப் பிரயோகிப்பவர்களிடம் (ரெபெக்காள்) சரியான மனத்தாழ்மையுடன் தெரிவித்தார்கள். இந்த உத்தம இஸ்ரயேலர்கள் பரம பிதாவுக்கு முன்பாக வந்தால், அவர் அவர்களை, ஆராய்ந்து, இந்த காரியங்கள் சம்பந்தமாக அவர்களை நியாயந்தீர்க்கும்போது (ஒரு வேளை என் தகப்பன் என்னைத் தடவி பார்ப்பார்), அவர்கள் அதில் குறைவுப்பட்டவர்களாக இருப்பார்கள் என்று எண்ணினார்கள். ஏனென்றால் பெயரளவிலான மாம்ச இஸ்ரயேலின் தலைவர்களுக்குரிய அதிகாரங்கள் அவர்களிடம் இல்லாததைப் பிதா விரைவாக அறிந்து கொள்வார் என்று எண்ணினார்கள் . அதினால் அவர் களைத் துணிவுள்ளவர்களாகவும் (எபி. 5:4 வசனத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கவும்), தேவனைப் பரியாசம் பண்ணு கிறவர்களாகவும் எண்ணக்கூடும் (அப்போது நான் அவருக்கு எத்தனாய் காணப்பட்டு). இது அவர்களுக்கு ஆசீர்வாதத்திற்கு பதிலாக அவருடைய மதிப்பின்மை யையும், அங்கீகாரமின்மையையும் கொண்டு வரக்கூடும் என்று எண்ணினார்கள் (என்மேல் ஆசீர்வாதத்தை அல்ல, சாபத்தை வரப் பண்ணிக் கொள்வேன்).

## யாக்கோபு ரெபெக்காளின் கட்டளைகளைப் பின்பற்றுவது

*12. ஆதி. 27:13* <u>அதற்கு அவன் தாய்: என் மகனே, உன்மேல் வரும் சாபம் என்மேல் வரட்டும்; என் சொல்லைமாத்திரம் கேட்டு, நீ போய், அவைகளை என் னிடத்தில் கொண்டுவா என்றாள்.</u> இந்த உத்தம இஸ்ரயேலர்கள் (யாக்கோபு) தேவனால் நியமிக்கப்பட்ட கற்பனைகளைப் பின்பற்றினால் (என் சொல்லைமாத்திரம் கேட்டு), ஒரு வேளை காரியங்கள் எதிர்பார்த்த விதத்தில் நிறைவேறவில்லையென்றால், தேவனுக்கு முன்பாக

அதற்குரிய பொறுப்பை தாங்கள் ஏற்றுக் கொள்வதாக இந்த ஆவிக்குரிய வாக்குத்தத்தங்களைப் பிரயோகிப் பவர்கள் (ரெபெக்காள்) உத்தம இஸ்ரயேலர்களுக்குத் தெரிவித்து, அவர்களுக்கு உறுதியளித்தார்கள். "வாக்குத் தத்தம் பண்ணினவரான தேவன் உண்மையுள்ளவராக இருப்பதால்" (எபி. 10:23; 1 கொரி. 1:9; 10:13; 1 தெச. 5:24; 2 தெச. 3:3), உத்தம இஸ்ரயேலர்களுக்குத் தேவையான எல்லா ஒத்தாசையும் பலமும் அவர்களுக்கு அளிக்கப் படுமென்று நிஜ நிறைவேறுதலான ரெபெக்காள் அவர் களுக்கு உறுதியளித்தாள் (சங். 121:1, 2 வசனத்தை, 2 கொரி. 12:9; பிலி. 4:13 வசனங்களுடன் ஒப்பிட்டுப் பார்க் கவும்). மேலும் அவர்கள் தங்கள் வாழ்க்கையில் தேவ னுக்கு முதலிடமளித்து (சங். 16:8-11; மத். 6:33), அவருடைய அழைப்புக்கு இணக்கமாகத் தங்களுடைய மனுஷீகம் முழுவதையும் எடுத்து, பிரதிஷ்டையில் தேவ னுக்கு முழுமையாக ஒப்புக் கொடுக்கும்போது மட்டுமே (அவைகளை என்னிடத்தில் கொண்டுவா )(நீதி. 23:26; ரோம. 12:1 வசனத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கவும்) இந்த அனுபவத்தில் வெற்றியடைவார்கள் என்று அவர் களுக்குத் தெரிவித்தார்கள்.

*13. ஆதி. 27:14* அவன் போய் அவைகளைப் பிடித்து, தன் தாயினிடத்தில் கொண்டுவந்தான்; அவனு டைய தாய் அவன் தகப்பனுக்குப் பிரியமானபடி ருசி யுள்ள பதார்த்தங்களைச் சமைத்தாள். அதற்குப்பிறகு இந்த உத்தம இஸ்ரயேலர்கள் (யாக்கோபு) தங்களுடைய மனுஷீகத்தை மரண பரியந்தம் ஒப்புக் கொடுத்தார்கள் (அவைகளைப் பிடித்து ... கொண்டுவந்தான்) . மேலும் ஆவிக்குரிய வாக்குத்தத்தங்கள் மற்றும் அவைகளைப் பிரயோகிப்பவர்கள் (ரெபெக்காள்) அளிக்கும் உற்சாக மான உதவியோடு, அவர்களுடைய மனுஷீகமானது, தேவன் மிக உயர்வாக மதிக்கிற (சங். 147:11) சுகந்த வாசனையான காணிக்கையாக ஆயத்தமாக்கப்பட்டது (ருசியுள்ள பதார்த்தங்களைச் சமைத்தாள்).

*14. ஆதி. 27:15* பின்பு, ரெபெக்காள் வீட்டிலே தன்னிடத்தில் இருந்த தன் மூத்த மகனாகிய ஏசாவின் நல்ல வஸ்திரங்களை எடுத்து, தன் இளைய மகனாகிய யாக்கோபுக்கு உடுத்தி, ... மாம்ச இஸ்ரயேலர்கள் விசேஷ மாக அதின் தலைவர்கள் (ஏசா) , பல வருடங்களாக நியாயப்பிரமாணத்தின் கீழ் பெற்ற பயிற்றுவித்தலின் விளைவாக (கலா.3:24), யூத யுக அறுவடை காலத்தில் நல்ல கனிகளைக் கொண்டு வந்திருக்க வேண்டும். நியாயப்பிரமாணத்தின் ஆவியும் எழுத்தும் அவர்களிடம் இருந்திருக்க வேண்டும் (ரோம. 2:28,29). மேலும் யூத யுக அறுவடை காலத்தில் தேவனுக்குப் பிரியமான காணிக் கையைக் கொண்டு வருவதற்கு அவர்களிடம் சில நல்ல பண்புகள் (மத். 23:23) இருந்திருக்க வேண்டும். ஆனால், பொதுவாகச் சொன்னால் அவர்கள் இந்த பண்புகளைப் புறக்கணித்திருந்தார்கள். அவர்கள் தங்கள் உதடுகளினால் தேவனிடம் சேர்ந்தாலும், அவர்கள் இருதயம் தேவ னுக்குத் தூரமாய் விலகி இருந்தது (ஏசா. 29:13; மாற். 7:6). இந்த நல்ல பண்புகள் ஆபிரகாம் உடன்படிக்கை மற்றும் அதை பிரயோகிப்பவர்களின் செயல் எல்லையின் இன்றி யமையாத பகுதிகளாக இருந்தன (ரெபெக்காள் வீட்டிலே தன்னிடத்திலிருந்த ... வஸ்திரங்கள்). இந்த உத்தம இஸ்ர யேலர்கள் இந்த நல்ல பண்புகளை அணிந்து கொள்ள நிஜ நிறைவேறுதலான ரெபெக்காள் அவர்களை உற்சாகப் படுத்தினாள். அவர்களும் அதை ஏற்றுக் கொண்டார்கள். (யாக்கோபுக்கு உடுத்தி).

*15. ஆதி. 27:16,17* வெள்ளாட்டுக்குட்டிகளின் தோலை அவன் கைகளிலேயும் ரோமமில்லாத அவன் கழுத்திலேயும் போட்டு; தான் சமைத்த ருசியுள்ள பதார்த்தங்களையும் அப்பங்களையும் தன் குமாரனாகிய யாக்கோபின் கையிலே கொடுத்தாள். இதற்குக் கூடுத லாக, உத்தம இஸ்ரயேலர்கள் (யாக்கோபு) தங்களுடைய மனுஷீகத்தைப் பலி செய்ததினால், அவர்கள் ஊழியஞ் செய்வதற்கும், தேவனுடைய சித்தத்திற்குத் தங்களை முழுமையாக ஒப்புக் கொடுப்பதற்கும் தேவையான சில விசேஷித்த வல்லமைகளையும், பெயரளவிலான மாம்ச இஸ்ரயேலின் தலைவர்களிடமிருந்த முன்னுரிமைகளுக் கொத்தவைகளை, நிஜ நிறைவேறுதலான ரெபெக்காள் அவர்களுக்கு அளித்தாள். எடுத்துக்காட்டாக நிஜ நிறை வேறுதலான கீழ்ப்பட்ட ஆசாரியத்துவத்திடம் சில வல்லமைகளும் முன்னுரிமைகளும் இருந்தன. அவைகள் அடையாளமான கீழ்ப்பட்ட ஆசாரியத்துவத்திடம் இருந்த வைகளுக்கு ஒத்தவைகளாக இருந்தன. அவைகள் அந்த அடையாளமான ஆசாரியத்துவத்தை நீக்கி, அதனிடத்தை எடுத்துக் கொண்டன. இவ்வாறாக நிஜ நிறைவேறுதலான ரெபெக்காள் தேவனுக்குப் பிரியமான ஒரு காணிக் கையை (ருசியுள்ள பதார்த்தங்களையும்) ஏற்பாடு செய் தாள். மேலும் அதைச் சத்தியத்தினாலும் சத்திய ஆவி யினாலும் (அப்பங்களையும்)பரிசுத்தமாக்கி, அவர்கள் கையாளும்படி (யாக்கோபின் கையிலே) அதை ஏற்பாடு செய்தாள்.

*16. ஆதி. 27:18,19* அவன் தன் தகப்பனிடத்தில் வந்து, என் தகப்பனே என்றான்; அதற்கு அவன்: இதோ, இருக்கிறேன்; நீ யார், என் மகனே என்றான். அப்பொழுது யாக்கோபு தன் தகப்பனை நோக்கி: நான் உமது மூத்த மகனாகிய ஏசா; நீர் எனக்குச் சொன்னபடியே செய்தேன்; உம்முடைய ஆத்துமா என்னை ஆசீர்வதிக்கும்படி, நீர் எழுந்து உட்கார்ந்து, நான் வேட்டையாடிக்கொண்டு வந்ததைப் புசியும் என்றான். இவ்வாறாக உத்தம இஸ்ர யேலர்கள் (யாக்கோபு) முழுமையாக ஆயத்தப்படுத்தப் பட்டவர்களாகவும், உடன்படிக்கையின் மிக உயர்ந்த ஆசீர்வாதத்தை ஆர்வமாக விரும்புகிறவர்களாகவும், தெரிந்து கொள்ளப்படுதல் சம்பந்தமாகப் பட்சபாத மின்மை என்ற இயல்பில் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்ட தேவனுக்குத் (தகப்பன் ஈசாக்கு) தங்களைப் பணிவு டனும் மரியாதையுடனும் ஒப்புக் கொடுத்தார்கள். அவர் களுடைய அடையாளம் சம்பந்தமாகத் (குணப்பண்புகள்) தேவன் அவர்களைப் பரீட்சித்தார் (நீ யார், ... என்றான்). மேலும் அவர்கள் தங்களுடைய மனநிலை வார்த்தை மற்றும் செயல்களின் மூலம் தேவனுடைய நிஜ நிறை வேறுதலான முதற் பிறப்புகளாக இருப்பதைக் குறித்து அவருக்கு உறுதியளித்தார்கள் [நான் உமது மூத்த குமாரனாகிய ஏசா (ஏசாவைப் பிரதிநிதித்துவப்படுத்து கிறேன்)].அவர்கள் தேவனுடைய கட்டளைகளைக் கீழ்ப் படிதலுடன் நிறைவேற்றினதையும் (நீர் எனக்குச் சொன்னபடியே செய்தேன்) அவருக்கு வெளிப்படுத் தினார்கள் (யோவா. 17:6 வசனத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கவும்). அதினால் அவர் விரும்பிய, அவருக்குப் பிரியமான விசேஷித்த காணிக்கையைக் கொண்டு வந்ததை அவருக்குத் தெரிவித்தார்கள். ஆகையால் தேவன் அதைத் தமக்குரியதாக்கிக் கொண்டு (புசியும்), அதற்கிணக்கமாக, அவர்கள் விரும்பின பெரிய ஆசீர்வாதத்தை அவர்களுக்குக் கொடுக்க வேண்டு மென்று தேவனிடத்தில் வேண்டுதல் செய்தார்கள் (ஆசீர்வதிக்கும்படி).

*17. ஆதி. 27:20,21* அப்பொழுது ஈசாக்குத் தன் குமாரனை நோக்கி: என் மகனே, இது உனக்கு இத்தனை சீக்கிரமாய் எப்படி அகப்பட்டது என்றான். அவன்: உம்மு

டைய தேவனாகிய கர்த்தர் எனக்கு நேரிடப்பண்ணினார் என்றான். அப்பொழுது ஈசாக்கு யாக்கோபை நோக்கி: என் மகனே, நீ என் குமாரனாகிய ஏசாதானோ அல்லவோ என்று நான் உன்னைத் தடவிப்பார்க்கும்படி கிட்ட வா என்றான். அடுத்ததாகத், தெரிந்து கொள்ளப்படுதல் சம்பந்தமாகப் பட்சபாதமின்மை என்ற இயல்பில் தேவன் (ஈசாக்கு), யெஷுஆவின் சீஷர்கள் (யாக்கோபு) அவருக்கு பிரியமான காணிக்கையை இவ்வளவு விரைவாக எவ்வாறு கொண்டு வரக் கூடியவர்களாக இருந்தார்கள் என்பது சம்பந்தமாக அவர்களைப் பரீட்சித்தார். அவர்கள் மனநிலையிலும், வார்த்தையிலும், செயலிலும் மனத்தாழ்மையுடன் செயல்பட்டு, எல்லா கனத்தையும், மகிமையையும் ஞானம், நீதி மற்றும் வல்லமை என்ற இயல்புகளில் தேவனுக்குரியதாக்கினார்கள். ஏனென்றால் எவ்வித தாமதமுமில்லாமல் அந்த கட்டளைகளுக்குக் கீழ்ப்படிய (மத். 4:20) தேவன் தம்முடைய வார்த்தை, ஆவி மற்றும் பரிபாலனங்களின் மூலம் அவர்களுக்கு உதவி செய்திருந்தார் (உம்முடைய தேவனாகிய கர்த்தர் எனக்கு நேரிடப்பண்ணினார்) அதற்குப்பிறகு தேவன் தெரிந்து கொள்ளப்படுதல் சம்பந்தமாகப் பட்சபாதமின்மை என்ற இயல்பில் செயல்பட்டு (தேவன் பட்சபாதமுள்ளவரல்ல – அப். 10:34,35), அவர்கள் தேவனிடம் கிட்டிச் சேர வேண்டுமென்று அவர்களை அழைத்தார் (யாக். 4:8): அவர்கள் அவ்வாறு கிட்டிச் சேரும்போது, அவர்கள் நிஜ நிறைவேறுதலான முதற் பிறப்பாயிருக்க தகுதியுள்ளவர்களா இல்லையா என்று தீர்மானிப்பதற்குத் தேவன் அவர்களை மேலும் பரீட்சிக்கக் கூடும் (1 கொரி. 3:13; 1பேது. 1:6-9).

*18. ஆதி. 27:22* யாக்கோபு தன் தகப்பனாகிய ஈசாக்கண்டையில் கிட்டப் போனான்; அவன் இவனைத் தடவிப்பார்த்து: சத்தம் யாக்கோபின் சத்தம், கைகளோ ஏசாவின் கைகள் என்று சொல்லி, ... அதற்குப் பிறகு அவர்கள் தேவனுக்குக் கிட்டிச் சேர்ந்தார்கள். தேவன் அவர்களைப் பரீட்சித்து, மிகவும் நுணுக்கமாகப் பரிசோதித்தார். அவர்கள் பெயரளவிலான மாம்ச இஸ்ரயேலர்களைப் போல் அல்லாமல், சத்திய செய்தியை உண்மைத்துவத்துடனும் அன்புடனும் பிரகடனம் பண்ணுவதை அவர் கவனித்தார் (சத்தம் யாக்கோபின் சத்தம்) (2கொரி.4:2;எபே.4:15 வசனங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கவும்). அதே நேரத்தில், பெயரளவிலான மாம்ச இஸ்ரயேலின் முதற் பிறப்புகளுக்கு, விசேஷமாக அதின் தலைவர்களின் ஊழியம் (கைகளோ ஏசாவின் கைகள்) சம்பந்தமாகக் கொடுக்கப்பட்ட சில விசேஷித்த வல்லமைகளும் தனிப்பட்ட உரிமைகளும் (யாத். 4:22; ஓசி. 11:1; ரோம. 9:3,4) உத்தம இஸ்ரயேலர்களிடமும் இருப்பதை அவர் கவனித்தார்.

*19. ஆதி. 27:23,24* அவனுடைய கைகள் அவன் சகோதரனாகிய ஏசாவின் கைகளைப்போல ரோமமுள்ளவைகளாயிருந்தபடியினாலே, இன்னான் என்று அறியாமல், அவனை ஆசீர்வதித்து, நீ என் குமாரனாகிய ஏசாதானோ என்றான்; அவன்: நான்தான் என் -றான். இவ்வாறாக உடன்படிக்கையின் பிரதான ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்ளும் தகுதியைப் பொறுத்தவரை, தேவன் உத்தம இஸ்ரயேலர்களுக்கும் பெயரளவிலான மாம்ச இஸ்ரயேலர்களுக்கும் இடையில் எவ்வித வேறுபாட்டையும் காண்பிக்கவில்லை(இன்னான் என்று அறியாமல்) . இதன் சம்பந்தமாக இறுதியான பரீட்சையாக அவர்களுடைய அடையாளம் சம்பந்தமாக அவர்களை மறுபடியும் பரீட்சித்தார் (நீ என் குமாரனாகிய ஏசாதானோ). அவர்கள் தங்களுடைய மனநிலை, வார்த்தை மற்றும் செயலின்மூலம் அவர்கள் உண்மையாகவே தேவனுடைய தெரிந்து கொள்ளப்பட்டவர்களான அவருடைய முதற்பிறப்புகளாக இருந்தார்கள் என்று மறுபடியும் தேவனுக்கு உறுதியளித்தார்கள் (நான்தான் என்றான்). இவ்வாறாகத் தெரிந்து கொள்ளப்படுதல் சம்பந்தமாகப் பட்சபாதமின்மை என்ற இயல்பில் தேவன் (ஈசாக்கு) செயல்பட்டு, அவர்களைப் பரிசோதிக்கும் இந்த பரீட்சைகளின் மூலம், அவர்கள் உண்மையாகவே நிஜ நிறைவேறுதலான முதற் பிறப்புகளாக இருந்தார்கள் என்றும், உடன்படிக்கையின் மிக உயர்ந்த ஆசீர்வாதத்திற்குரியவர்களாகவும் பாத்திரராகவும் இருந்தார்கள் என்றும் நிச்சயத்தைப் பெற்றுக் கொண்டார்.

## ஈசாக்கு யாக்கோபுக்கு ஆசீர்வாதத்தை அருளுவது

*20. ஆதி. 27:25* அப்பொழுது அவன்: என் குமாரனே, நீ வேட்டையாடிக் கொண்டுவந்ததை நான் புசித்து, என் ஆத்துமா உன்னை ஆசீர்வதிக்கும்படி அதை என் கிட்டக் கொண்டுவா என்றான்; அவன் அதைக் கிட்டக் கொண்டுபோனான்; அப்பொழுது அவன் புசித்தான்; பிற்பாடு, திராட்சரசம் அவனுக்குக் கொண்டுவந்து கொடுத்தான், அவன் குடித்தான். அதற்குப் பிறகு, உத்தம இஸ்ரயேலர்கள் (யாக்கோபு) தங்களுடைய காணிக்கைகளைத் (வேட்டையாடிக் கொண்டுவந்ததை) தேவன் (ஈசாக்கு) உபயோகிக்கக் கூடியவைகளாக ஆக்க வேண்டுமென்று அவர்களிடம் கோரினார். மேலும் தம்முடைய நற்சித்தத்தின்படியும் விருப்பத்தின்படியும் அவர்களுடைய காணிக்கைகளைத் தமக்குரியவைகளாக ஆக்கிக் கொண்டு, ஊழியத்தில் தமக்கென்று உபயோகிப்பதாக (நான் புசித்து)அவர்களுக்கு உறுதியளித்தார் (ரோம. 8:36; எபே. 1:9;6:6,7; பிலி.2:13). அவர்கள் அவ்வாறு செய்யும்போது, அவருடைய உடன்படிக்கையின் விசேஷித்த ஆசீர்வாதத்தைத் தேவன் அவர்களுக்கு அருளுவார் (உன்னை ஆசீர்வதிக்கும்படி). சத்தியத்தினாலும் சத்திய ஆவியினாலும் (திராட்சரசம்) பரிசுத்தமாக்கப்பட்டிருந்த காணிக்கைகளைக் கொண்டு வந்து அவர்கள் பிரிதிகிரியை செய்யும்போது, தேவன் அவர்களுடையக் காணிக்கைகளை தமக்குரியவைகளாக ஆக்கிக் கொண்டார் (அவன் புசித்தான் ... அவன் குடித்தான்).

*21. ஆதி. 27:26,27* அப்பொழுது அவன் தகப்பனாகிய ஈசாக்கு அவனை நோக்கி: என் மகனே, நீ கிட்ட வந்து என்னை முத்தஞ்செய் என்றான். அவன் கிட்டப் போய், அவனை முத்தஞ்செய்தான்; அப்பொழுது அவனுடைய வஸ்திரங்களின் வாசனையை மோந்து: இதோ, என் குமாரனுடைய வாசனை கர்த்தர் ஆசீர்வதித்த வயல்வெளியின் வாசனையைப்போல் இருக்கிறது. மேலும் அவர்களுடைய (உத்தம இஸ்ரயேலர்கள் -யாக்கோபு) ஆழ்ந்த அன்பின் வெளிப்பாட்டைப் பெற தேவன் (ஈசாக்கு) விரும்பினார். அவர்களும் அவரிடம் நெருங்கி வந்து அவர்களுடைய ஆழ்ந்த அன்பை மகிழ்ச்சியுடன் அவருக்குச் செலுத்தினார்கள் (சங். 63:3-5; எபி. 13:15). அவர்கள் இவ்விதமாகத் தேவனோடு நெருங்கி இருக்கும்போது, ஆவிக்குரிய இஸ்ரயேலர்களுக்குரிய குணநலன்களின் சுகந்த வாசனையைத் தேவன் உணர்ந்தார் (யோவா. 1:47;உன். 4:11;வெளி. 14:5). ஆகையால் உடன்படிக்கையின் மிக உயர்ந்த (ஆவிக்குரிய) ஆசீர்வாதத்திற்கு அவர்கள் தகுதியுள்ளவர்களென்றும், அது அவர்களுக்குரிய -தென்றும் தேவன் உறுதியாகக் கூறினார். அழகு மற்றும்

இனிமையான பண்புகளை மற்றெல்லா ஜீவிகளை விட மிகச்சிறப்பாக உணருகிறவரான பரம பிதா மிகுந்த திருப்தியுடனும் மகிழ்ச்சியுடனும் உத்தம இஸ்ரயேலர்களைக் நோக்கிப் பார்த்தார்! இவ்வாறாக அன்பு மற்றும் தெரிந்து கொள்ளப்படுதல் சம்பந்தமாகப் பட்சபாதமின்மை என்ற இயல்புகளில் தேவன் செயல்பட்டு, மிக உயர்வான இந்த ஆசீர்வாதத்தை அவர்களுக்கு அருளினார். மேலும் அவர்களுடைய குணநலன்களின் சுகந்த வாசனையானது, மிகுந்த கனிகளைக் கொடுக்கும் படிக்கு ஞானம் நீதி மற்றும் வல்லமை என்ற இயல்புகளில் தேவன் ஆசீர்வதித்த செயல் எல்லைக்குரிய சுகந்த வாசனைக்கொத்ததாக இருந்ததென்பதைத் தேவன் விசேஷமாகக் கவனித்தார்.

*22.* ஆதி. *27:28,29* <u>தேவன் உனக்கு வானத்துப் பனியையும் பூமியின் கொழுமையையும் கொடுத்து, மிகுந்த தானியத்தையும் திராட்சரசத்தையும் தந்தருளுவாராக. ஜனங்கள் உன்னைச் சேவிக்கவும் ஜாதிகள் உன்னை வணங்கவும் கடவர்கள்; உன் சகோதரருக்கு எஜமானாயிருப்பாய்; உன் தாயின் பிள்ளைகள் உன்னை வணங்குவார்கள்; உன்னைச் சபிக்கிறவர்கள் சபிக்கப் பட்டவர்களும், உன்னை ஆசீர்வதிக்கிறவர்கள் ஆசீர்வதிக் கப்பட்டவர்களுமாய் இருப்பார்கள் என்று சொல்லி அவனை ஆசீர்வதித்தான்.</u> தம்முடைய ஞானம், நீதி மற்றும் வல்லமை என்ற இயல்புகளில் செயல்பட்டுத் தேவன் அவர்களுக்கு பின்வரும் ஆசீர்வாதங்களைக் கொடுக்க வேண்டுமென்று தேவனுடைய அன்பென்ற இயல்பில் அவர் (ஈசாக்கு) அவர்களுக்காக ஆர்வத்துடன் விரும்பினார்: *(1)* காலத்திற்குரிய சத்தியம் (வானத்து பனி; உபா. *32:2;* நியா. *6:37-40; 1* ராஜா. *17:1), (2)* மனுகுலத்திற்கு தயவு மற்றும் ஆசீர்வாதங்களின் நிறைவு (பூமியின் கொழுமை), *(3)* கடினமான மற்றும் எளிமையான போதனைகளின் மிகுதி (மிகுந்த தானியமும் திராட்சரசமும்), *(4)* ஜனங்கள் (ராஜ்யத்தில் – லூக்.*12:32)*அவர்களுக்குப் பயபக்தியைச் செலுத்தி, அவர்களுக்கு ஊழியஞ் செய்வது (ஜனங்கள் உன்னைச் சேவிக்கவும்), *(5)* தேசங்கள் அவர்களை பணிந்து கொள்வது (ஜாதிகள் உன்னை வணங்கவும் - ஏசா. *60:11-14;* தானி. *7:14, 27;* வெளி. *11:15), (6)* மாம்ச இஸ்ரயேலர்களும் அவர்களுக் குக் கீழ்ப்பட்டிருப்பது (உன் சகோதரருக்கு எஜமானாயிருப்பாய், உன் தாயின் பிள்ளைகள் உன்னை வணங்குவார்கள்- ஆதி. *25:23;* ஒப. *21;* மத். *19:28;* லூக். *1:33), (7)* விருப்பதுணிவுடனும் விடாமுயற்சியுடனும் அவர்களைத் தவறாக நடத்துபவர்களும், மில்லினிய யுகத்தில் அவர்களுக்குக் கீழ்ப்படியாதவர்களும் சபிக்கப்பட்டவர்களாகக் கருதப்பட்டு அழிக்கப்படுவார்கள் (உன்னைச் சபிக்கிறவர்கள் சபிக்கப்பட்டவர்களாயிருப்பார்கள் – ஏசா. *65:20;* அப். *3:23), (8)* அவர்களைக் கனம் பண்ணி அவர்களுக்கு நன்மை செய்பவர்கள் ஆசீர்வதிக்கப்படுவார்கள் (உன்னை ஆசீர்வதிக்கிறவர்கள் ஆசீர்வதிக்கப் பட்டவர்களாக இருப்பார்கள் – ஆதி.*12:3).* மில்லினிய யுகத்தில் அவர்களைக் கனம் பண்ணுபவர்கள் பூமியின் மேல் நித்திய ஜீவனுடன் ஆசீர்வதிக்கப்படுவார்கள் [எரே. *4:2 (E Vol. 14, p. 334);* மத். *25:34, 46)].* இவ்வாறாக நிஜ நிறைவேறுதலான ஈசாக்கு, யூத யுக அறுவடையில், அப்போஸ்தலர்கள் மற்றும் எழுபது பேர்களுடன் தொடங்கி, ஆவிக்குரிய இஸ்ரயேலர்களுக்கு உடன்படிக் கையின் பிரதான ஆசீர்வாதத்தை அருளினார் *(E Vol. 10, p. 606).*

*23.* யாக்கோபு சேஷ்ட புத்திர பாகத்தைப் பெற்றுக் கொள்வதற்காக ரெபெக்காள் மற்றும் யாக்கோபு ஈசாக்கை வஞ்சித்ததைக் குறித்தும்,தேவனும் அவர்களோடு ஒத்துழைத்து, அதற்குக் கொஞ்சம் காலத்திற்குப் பிறகு, யாக்கோபுக்கு ஒரு சொப்பனத்தில் தோன்றி அவருக்கு உடன்படிக்கையை உறுதி செய்வதின் மூலம் அவர்களுடைய நடத்தையை அங்கீகரித்ததைக் *(*ஆதி.*28:10-25)* குறித்தும் அநேகர் ஆச்சரியப்படுகிறார்கள். பின்வரும் உண்மைகளின் வெளிச்சத்தில் நாம் தேவனுடைய குணாம்சத்தையும் இந்த விஷயத்தில் ரெபெக்காள் மற்றும் யாக்கோபின் நடத்தையையும் இன்னும் சிறப்பாகப் புரிந்து கொள்வோம்: *(1)*அரபியர்களின் வழக்கத்தில், வயது முதிர்ந்தவர்கள் மனமுறிவினால் மரிப்பதிலிருந்து காப்பதற்காக அவர்களிடம் காரியங்களை மறைப்பது முற்றிலும் சரியானதென்று இந்நாள்வரை கருதப்படுகிறது. ஏசா சேஷ்ட புத்திர பாகத்தை முற்றிலும் மதிக்கவில்லை என்று ஈசாக்கு அறிந்து கொண்டிருந்தாரேயானால், அவர் மனமுறிவு அடைந்திருப்பார். ஆகையால் அவருக்குத் தீங்கு விளைவிப்பதற்காக அல்லாமல், அவரைக் காப்பதற்காகவே ரெபெக்காள் மற்றும் யாக்கோபு அவரிடமிருந்து காரியங்களை மறைக்க தீர்மானித்தார்கள். *(2)* "மூத்தவன் இளையவனைச் சேவிப்பான்" என்று தேவன் ரெபெக்காளுக்குக் கொடுத்திருந்த வெளிப்பாட்டை *(*ஆதி.*25:23)* அவள் நினைவு கூர்ந்ததால், இந்த விஷயத்தைப் பற்றிய முழு பொறுப்பை ஏற்றுக் கொள்ள முன் வந்தாள் (ஆதி. *27:13). (3)* இவ்வாறாக வாக்குத்தத்தத்தின் வார்த்தையைப்பற்றிக் கொண்டு, விசுவாசத்தின் முழு நிச்சயத்துடன் செயல் பட்டு, தனக்கு இடர் நேரிடக் கூடியதாக இருந்தாலும், சேஷ்ட புத்திர பாகத்தையும் அதனோடு வரும் ஆசீர்வாதத்தையும் யாக்கோபு பெற்றுக் கொள்ள வேண்டுமென்று தேவன் வெளிப்படுத்தி இருந்த அவருடைய சித்தத்திற்கு இணக்கமாகச் செயல்பட ரெபெக்காள் மனதாயிருந்தாள். *(4)* அவர்களுடைய தாயாக அவள் ஏசாவின் முறைக்கேடான மற்றும் தகுதியற்ற குணத்தையும், ஆபிரகாம் உடன்படிக்கையின் உயர்வான ஆசீர்வாதங்களை அவர் அற்பமாக எண்ணினதையும் அவள் அறிந்திருந்தாள், அதே நேரத்தில் யாக்கோபு இந்த ஆசீர்வாதங்களை ஆவலாய் விரும்பினார் என்றும், அவைகளுக்காகப் பூமிக்குரிய அனுகூலங்களை விட்டுவிடவும் அவர் மனதாயிருந்தார் என்றும் அவள் அறிந்திருந்தாள்; ஆகையால் அவள் அதற்கிணக்கமாகச் செயல்பட்டாள். *(5)* ஏசா சேஷ்ட புத்திர பாகத்தை யாக்கோபுக்கு விற்று போட்டார் என்பதையும், ஆகையால் யாக்கோபுக்குரியதாயிருந்த சேஷ்ட புத்திர பாகத்தோடு வரும் ஆசீர்வாதத்தை மட்டுமே இப்பொழுது யாக்கோபு கோரினார் என்பதையும் ரெபெக்காள் மற்றும் யாக்கோபு அறிந்திருந்தார்கள். *(6)* ஏசா ஆணையிட்டு யாக்கோபோடு செய்த ஒப்பந்தத்தை முற்றிலும் அசட்டை செய்து, யாக்கோபிடம் விற்றுப் போட்டதும், இனி தன்னுடைய உரிமையாக இல்லாததுமான சேஷ்ட புத்திர பாகத்தின் ஆசீர்வாதத்தைப் பெற ஏசா இப்பொழுது நேர்மையற்ற விதத்தில் நாடுகிறார் என்றும் அவர்கள் அறிந்திருந்தார்கள். *(7)* தேவபக்தி இல்லாதவரான ஏசா சேஷ்ட புத்திர ஆசீர்வாதத்துடன் வருமென்று அவர் எண்ணின ஆஸ்திகளைக் குறித்து மட்டுமே அக்கறை கொண்டார் என்று அவர்கள் அறிந்திருந்தார்கள். பிற்காலத்தில் அது நிரூபிக்கப்பட்டது. ஏனென்றால் ஏசா ஆஸ்திகளைப் பெற்றுக் கொண்டபிறகு யாக்கோபுக்கு எதிராக எவ்வித விரோதத்தையும் கொள்ளவில்லை. ஆனால் யாக்கோபு சேஷ்ட புத்திர பாகம் மற்றும் அதனோடு வரும் ஆசீர்வாதத்தில் அர்த்தப்படுத்தப்பட்ட தெய்வீக தயவைக்

குறித்து மட்டுமே அக்கறை கொண்டார். ஆகையால் ஈசாக்கின் ஆஸ்திகளை எவ்விதத்திலும் கோரவில்லை. அவைகளை முற்றிலும் ஏசாவிற்கு விட்டுவிட்டார்.

*24.* இவ்வாறாக அந்த விஷயத்தை மறைப்பது எந்த ஒருவனுக்கும் தீங்கு விளைவிக்கவில்லை,ஈசாக்கு மனமுறிவினால் மரிப்பதைத் தடுத்தது, இரு சகோதரர்களும் ஈசாக்கின் உடைமைகளிலிருந்து எதைப் பெற்றுக் கொள்ள விரும்பினார்களோ அதை அவர்களுக்கு அளித்தது. ஆனால் அவர்கள் அந்த காரியத்தை மறைக்காமலிருந்திருந்தால், அது ஈசாக்குக்கும் யாக்கோபுக்கும் பெரிதும் அநீதியை விளைவித்திருக்கும். மேலும் மனுஷீக கண்ணோட்டத்திலிருந்து பார்க்கும் போது தேவனுடைய திட்டத்தின் ஒரு முக்கியமான அம்சம் தடைச்செய்யப் பட்டிருக்கும். மேலும் தேவனுடைய வாக்கியங்கள், முற்றிலும் தகுதியற்ற ஒரு ஜாதியாகிய ஏசாவின் சந்ததியாரின் பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டிருக்கும். சகலத்தையும் ஆண்டு நடத்தும் உரிமையுள்ளவரான தேவன் இவ்வித விளைவுகளை அனுமதிக்க முடியாது, அனுமதிக்கவும் மாட்டார். இந்த காரணங்களுக்காகத், தேவன் தம்முடைய குணாம்சத்திற்கு முற்றிலும் இணக்கமாக இந்த பரிவர்த்தனை முழுவதிலும் யாக்கோபுக்குத் தயவளித்தார்.

*25.* இந்த கட்டுரையில் நாம் காண்பதைப் போல், இந்த இரு சகோதரர்களின் மூலம் தேவன் ஒரு அடையாளத்தை உருவாக்கிக் கொண்டிருந்தார் என்று பரிசுத்த பவுல் குறிப்பிடுவதையும் நாம் மறந்து விடக் கூடாது *(ரோம. 9:10-14; எபி. 12:16,17)*. நிச்சயமாக இந்த அடையாளங்கள் சம்பந்தமாக, அதாவது ஏசா மற்றும் யாக்கோபு சம்பந்தமாகத் தேவன் எவ்விதத்திலும் அநீதியாகச் செயல்படவில்லை. அதுபோலவே அவர்களுடைய நிஜ நிறைவேறுதல்களாகிய மாம்ச இஸ்ரயேலர்கள் மற்றும் ஆவிக்குரிய இஸ்ரயேலர்கள் சம்பந்தமாகவும் தேவன் எவ்விதத்திலும் அநீதியாகச் செயல்படவில்லை, செயல்படவும் மாட்டார். மேலே சொல்லப்பட்ட கருத்துக்கள் பின்வரும் கருத்தை நிச்சயமாக நிரூபிக்கின்றன. தேவன் பட்சபாதமுள்ளவரல்ல, ஆனால் குணாம்சத்தை மதிக்கிறவரென்பது நிச்சயமான ஒரு உண்மையாகும். அதாவது விசுவாச உண்மைத்துவமில்லாதவர்களை அவர் அங்கீகரிக்க மாட்டார், மதிக்க மாட்டார் மற்றும் அவர்களைப் புறக்கணிப்பார். விசுவாச உண்மைத்துவமுள்ளவர்களை அவர் அங்கீகரிப்பார், உயர்வாக மதிப்பார் மற்றும் அவர்களை ஏற்றுக் கொள்வார் *(அப். 10:34,35)*, இப்பொழுது நாம் ஆதி. *27:30-45* வரையுள்ள வசனங்களின் நிஜ நிறைவேறுதலை தொடர்ந்து கருத்தில் கொள்வோம்.

## ஏசாவின் காணிக்கை மற்றும் கசப்பான ஏமாற்றம்

*26.* ஆதி. *27:30,31* ஈசாக்கு யாக்கோபை ஆசீர்வதித்து முடிந்தபோது, யாக்கோபு தன் தகப்பனாகிய ஈசாக்கின் சமுகத்தைவிட்டுப் புறப்பட்டவுடனே, அவன் சகோதரனாகிய ஏசா வேட்டையாடி வந்து சேர்ந்தான். அவனும் ருசியுள்ள பதார்த்தங்களைச் சமைத்து, தன் தகப்பனண்டைக்குக் கொண்டுவந்து, தகப்பனை நோக்கி: உம்முடைய ஆத்துமா என்னை ஆசீர்வதிக்கும்படி, என் தகப்பனார் எழுந்திருந்து, உம்முடைய குமாரனாகிய நான் வேட்டையாடிக் கொண்டுவந்ததைப் புசிப்பாராக என்றான். தெரிந்து கொள்ளப்படுதல் சம்பந்தமாகப் பட்சபாதமின்மை என்ற இயல்பில் செயல்படுகிற தேவன் (ஈசாக்கு), பன்னிருவரிலும் எழுபது பேர்களிலும் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்ட ஆவிக்குரிய இஸ்ரயேலர்களுக்கு (யாக்கோபு) உடன்படிக்கையின் பிரதான ஆசீர்வாதங்களை முழுமையாக அருளின பிறகு, அவர்கள் தங்களுடைய ஊழியத்தைச் செய்ய புறப்பட்டார்கள். அதற்குப்பிறகு பெயரளவிலான மாம்ச இஸ்ரயேலர்களின் தலைவர்கள் (ஏசா) அவர்களுடைய ஊழியத்தின் செயல் எல்லையில் அவர்கள் செய்த முயற்சிகளின் விளைவுகளுடன் வந்து தேவனுக்கு ஒரு காணிக்கையை ஆயத்தம் செய்தார்கள். மாம்சத்தின்படி அவர்களுக்கு ஆபிரகாமுடன் இருந்த பந்தத்தினாலும் *(மத். 3:9;* யோவா. *8:39* வசனங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கவும்), நியாயப் பிரமாணத்தின் கீழ் அவர்கள் செய்திருந்த சொந்த கிரியைகளினாலும் *(லூக்.18:9-12;16:15; கலா.2:16; எபே. 2:8-10)* அவர்களுடைய காணிக்கை தேவனுக்குப் பிரியமாக இருக்குமென்று அவர்கள் எண்ணினார்கள். ஆகையால் தெரிந்து கொள்ளப்படுதல் சம்பந்தமாகப் பட்சபாதமின்மை என்ற இயல்பில் செயல்படுகிற தேவன் (ஈசாக்கு) அவர்களுடைய காணிக்கையைத் தமதாக்கிக் கொண்டு, அதற்குப்பிறகு உடன்படிக்கையின் பிரதான ஆசீர்வாதத்தை அவர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்ற வேண்டுகோளுடன் அந்த காணிக்கையை அவரிடம் கொண்டு வந்தார்கள்.

*27.* ஆதி. *27:32,33* அப்பொழுது அவன் தகப்பனாகிய ஈசாக்கு: நீ யார் என்றான்; அதற்கு அவன்: நான் உமது மூத்த மகனாகிய ஏசா என்றான். அப்பொழுது ஈசாக்கு மிகவும் பிரமித்து நடுங்கி: வேட்டையாடி எனக்குக் கொண்டுவந்தானே, அவன் யார்? நீ வருமுன்னே அவையெல்லாவற்றிலும் நான் புசித்து அவனை ஆசீர்வதித்தேனே, அவன் ஆசீர்வதிக்கப்பட்டவனாகவும் இருப்பான் என்றான். தேவன் அவர்களைப் பரீட்சிக்கும் போது, அவர்கள் (பெயரளவிலான மாம்ச இஸ்ரயேலர்களின் தலைவர்கள்)தேவனுடைய பிரதான தெரிந்து கொள்ளப்பட்ட வகுப்பாராகிய அவருடைய முதற்பிறப்புகளாக இருந்தார்கள் என்று உரிமை பாராட்டினார்கள். நியாயப்பிரமாணத்தின் ஊழியக்காரர்களில் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டவராகத் தேவன் (ஈசாக்கு), பெயரளவிலான மாம்ச இஸ்ரயேலர்களின் தலைவர்களில் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்ட அந்த மாம்ச இஸ்ரயேலர்கள் (ஏசா), உடன்படிக்கையின் பிரதான ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்ளத் தவறினார்கள் என்று, யெஷுஆ மற்றும் மற்றவர்களின் போதனைகளின் மூலம், முதலில் அறிந்து கொண்டபோது, நியாயப்பிரமாணத்தின் ஊழியக்காரர்களில் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்ட அவர் (ஈசாக்கு) பெரிதும் சஞ்சலப்பட்டார். பெயரளவிலான மாம்ச இஸ்ரயேலின் தலைவர்களை (ஏசா) விட உயர்வாகச் செயல்பட்டு, அவர்களுக்கு முன்பே தேவனுக்குப் பிரியமான ஆசீர்வாதத்தைக் கொண்டு வந்தவர்களைக் குறித்து அவர்கள் விசாரித்தார்கள். மேலும் பெயரளவிலான மாம்ச இஸ்ரயேலர்கள் அவர்களுடைய காணிக்கையைத் தேவனிடத்திற்குக் கொண்டு வருவதற்கு முன்னமே அவர்களுடைய காணிக்கையைத் தேவன் தமதாக்கிக் கொண்டதையும், உடன்படிக்கையின் பிரதான ஆசீர்வாதத்தை அவர்களுக்கு அருளினதையும் நியாயப் பிரமாண உடன்படிக்கையின் ஊழியக்காரர்களில் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்ட தேவன் தெரிவித்தார். பிரதான ஆசீர்வாதம் ஆவிக்குரிய இஸ்ரயேலர்களுக்கு நிச்சயமாக அளிக்கப்படுமென்று தேவன் உறுதியாகக் கூறினார்.

*28.* ஆதி. *27:34,35* ஏசா தன் தகப்பனுடைய

வார்த்தைகளைக் கேட்டவுடனே, மிகவும் மனங்கசந்து உரத்த சத்தமிட்டு அலறி, தன் தகப்பனை நோக்கி: என் தகப்பனே, என்னையும் ஆசீர்வதியும் என்றான். அதற்கு அவன்: உன் சகோதரன் தந்திரமாய் வந்து, உன்னுடைய ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொண்டான் என்றான். தெரி - ந்து கொள்ளப்படுதல் சம்பந்தமாகப் பட்சபாதமின்மை என்ற இயல்பில் செயல்படுகிற தேவன் *(ஈசாக்கு)* உடன்படிக்கையின் பிரதான ஆசீர்வாதத்தை ஆவிக்குரிய இஸ்ரயேலர்களுக்குக் கொடுத்ததைப் *(மத். 21:42, 43; 8:11, 12; மாற். 12:9; லூக்.13:28, 29)* பெயரளவிலான மாம்ச இஸ்ரயேலின் பல்வேறு அங்கத்தினர்கள் *(ஏசா)* யூத யுக அறுவடையில் *(மற்றவர்கள் அதற்குப் பிறகும்)* உணர்ந்த போது, மனநிலையினாலும், வார்த்தையினாலும் செயலினாலும் மிகவும் கசப்பான ஏமாற்றத்தை வெளிப படுத்தினார்கள். கி.பி. 69-73 வரையுள்ள காலத்தில் அந்த தேசத்தின்மேல் வந்த உபத்திரவத்தில் இது உச்சநிலையை அடைந்தது. மேலும் அவர்கள் தேவனுடைய விசேஷித்த ஆசீர்வாதத்திற்காகப் பெரிதும் ஏக்கங் கொண்டு, அவர் அதை அவர்களுக்கு அளிக்க வேண்டுமென்று ஆர்வத் துடன் வேண்டிக் கொண்டார்கள் *(எபி. 12:17)*. ஆனால் ஆவிக்குரிய இஸ்ரயேலர்கள் "எத்தரென்னப்பட்டாலும் *(தந்திரமாய்)* நிஜஸ்தராக" *(2 கொரி. 6:8)* வந்து, மாம்ச இஸ்ரயேலர்களின் இடத்தை எடுத்துக் கொண்டு, உடன் படிக்கையின் பிரதான ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொண் டார்கள் என்று தேவன் அவர்களுக்கு வெளிப் படுத்தினார். மேலும் மாம்ச இஸ்ரயேலர்கள் அந்த ஆசீர்வாதத்திற்குப் பாத்திரராகத் தங்களை நிரூபித்திருந் தால் தேவன் அதை அவர்களுக்குக் கொடுத்திருப்பார் *(ரோம. 11:7; 9:27, 29-33; 8:1; அப். 28:25-29; 2 கொரி. 3:6)*.

*29. ஆதி. 27:36* அப்பொழுது அவன்: அவன் பெயர் யாக்கோபு என்னப்படுவது சரியல்லவா? இதோடே இரண்டுதரம் என்னை மோசம் போக்கினான்; என் சேஷ்ட புத்திரபாகத்தை எடுத்துக்கொண்டான்; இதோ, இப்பொழுது என் ஆசீர்வாதத்தையும் வாங்கிக் கொண்டான் என்று சொல்லி; நீர் எனக்கு ஒரு ஆசீர் வாதத்தையாகிலும் வைத்துவைக்கவில்லையா என் றான். ஆவிக்குரிய இஸ்ரயேலர்கள் *(யாக்கோபு)* இந்த ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொண்டதை கண்டு பெயரள விலான மாம்ச இஸ்ரயேலர்கள் *(ஏசா)* கோபமடைந்து, ஆவிக்குரிய இஸ்ரயேலர்கள் "மற்றொருவரின் இடத்தை எடுத்துக் கொண்டவர்கள் *(மோசம் போக்கினவன்)"* என்று அழைக்கப்படுவது சரியானதென்று தங்களுடைய மனநிலையின் மூலமும் வார்த்தையின் மூலமும் செயலின் மூலமும் கூறினார்கள் [யாக்கோபு *(supplanter* - மற்றொரு வரின் இடத்தை எடுத்துக் கொண்டவன்)]. *(1)* யாவே தேவனால் அபிஷேகம் பண்ணப்பட்டவரான மேசியா வின் உடன் சுதந்தரவாளிகளாகவும் தெய்வீக தன்மை யுடையவர்களாகவும் இருக்கும் சிலாக்கியமாகிய பிரதான தயவையும் *(சேஷ்ட புத்திரபாகம் – E Vol.6, p.447), (2)* அதனோடு வரும் உடன்படிக்கையின் மேன்மையான ஆசீர்வாதங்களையும் *(ஆசீர்வாதம்)*, மாம்ச இஸ்ரயேலர் களிடமிருந்து எடுத்துக் கொள்வதின் மூலம் ஆவிக்குரிய இஸ்ரயேலர்கள் அவர்களை இரண்டு தரம் மோசம் போக்கினதாக அவர்கள் எண்ணினார்கள். இந்த இரு காரியங்களும் தங்களுக்குரியதென்று மாம்ச இஸ்ரயேலர் கள் உரிமை பாராட்டி இருந்தார்கள். மாம்ச இஸ்ரயேலர் களுக்குக் கொடுக்கும்படி தேவன் ஏதேனுமொரு ஆசீர் வாதத்தை வைத்திருக்கக் கூடுமோ என்று ஆர்வத்துடன் அவரிடம் கேட்டார்கள் *(நீர் எனக்கு ஒரு ஆசீர்வாதத் தையாகிலும் வைத்திருக்கவில்லையா)*.

*30. ஆதி. 27:37* ஈசாக்கு ஏசாவுக்குப் பிரதி யுத்தரமாக: இதோ, நான் அவனை உனக்கு எஜமானாக வைத்தேன்; அவன் சகோதரர் எல்லாரையும் அவனுக்கு ஊழியக்காரராகக் கொடுத்து, அவனைத் தானியத்தினா லும் திராட்சரசத்தினாலும் ஆதரித்தேன்; இப்பொழுதும் என் மகனே, நான் உனக்கு என்னசெய்வேன் என் றான். தெரிந்து கொள்ளப்படுதல் சம்பந்தமாகப் பட்ச பாதமின்மை என்ற இயல்பில் தேவன் *(ஈசாக்கு)* பின் வரும் காரியங்களை அவர்களுக்குத் தெளிவுப்படுத் தினார்: *(1)* உடன்படிக்கையின் பிரதான ஆசீர்வாதம் கிறிஸ்து வகுப்பாருக்குரியதாக இருக்கும்படி தேவன் நிச்சயமாக ஏற்பாடு செய்திருந்தார் - கிறிஸ்து வகுப்பார் மாம்ச இஸ்ரயேலர்களின்மேல் ஆளுகை செய்வார்கள் *(மத். 19:28; அப். 2:36; 5:31), (2)* மாம்ச இஸ்ரயேலர்களும் *(மில்லினிய யுகத்தில் கிறிஸ்துவின் சகோதரர்களாகவும், தேவனுடைய பிள்ளைகளாகவும் ஆக விரும்புகிற மற்ற அனைவரும்)* கிறிஸ்து வகுப்பாருக்குக் கீழ்ப்பட்டு, அவர் களுக்கு ஊழியஞ் செய்ய வேண்டும் *(எபே. 1:9; பிலிப். 2:9 -11), (3)* தேவனுடைய வார்த்தையின் ஆழமான மற்றும் எளிமையான சத்தியங்களின் மூலம் தேவன் ஆவிக்குரிய இஸ்ரயேலர்களை ஆதரிப்பார் *(யோவா. 8:31,32)*. மேலும் மாம்ச இஸ்ரயேலர்களுக்குத் தேவையான பரீட்சைகளைக் கிருபையாக அவர்களுக்குக் கொடுப்பதின் மூலம்; தேவன் அவர்களுக்காக என்ன செய்யக் கூடுமென்று அவர்களிடம் தயவாகக் கேட்டார்.

*31. ஆதி. 27:38* ஏசா தன் தகப்பனை நோக்கி: என் தகப்பனே, இந்த ஒரே ஆசீர்வாதம் மாத்திரமா உம் மிடத்தில் உண்டு? என் தகப்பனே, என்னையும் ஆசீர் வதியும் என்று சொல்லி, ஏசா சத்தமிட்டு அழு தான். ஆவிக்குரிய இஸ்ரயேலர்களுக்குத் *(யாக்கோபு)* தேவன் அளித்த உடன்படிக்கையின் பிரதான ஆசீர்வாதம் மாறாத ஒன்றென்றும், ஒரு தேசமாக மாம்ச இஸ்ர யேலர்கள் *(ஏசா)* தேவ தயவிலிருந்து தள்ளப்பட்டிருந் தார்கள் என்றும் *(மத். 23:38; லூக். 19:42-44; 23:28-31)* மாம்ச இஸ்ரயேலர்கள் உணர்ந்தபோது, அவர்களுக்கு அளிக்கும் படி தேவனிடம் கூடுதலான ஆசீர்வாதங்கள் இருக்கக் கூடுமா என்று அவர்கள் மனநிலையின் மூலமும்; வார்த்தையின் மூலமும், செயலின் மூலமும் தேவனிடம் கேட்டார்கள். மேலும் மிகுந்த துக்கத்தை வெளிப்படுத்தி, தேவன் தங்களையும் ஆசீர்வதிக்க வேண்டுமென்று அவரிடம் மன்றாடினார்கள் *(லூக்.16:23-31* வசனங் களுடன் ஒப்பிட்டுப் பார்க்கவும்). மாம்ச இஸ்ரயேலர் களின் ஏமாற்றம், துக்கம் மற்றும் அவர்கள் தேவனிடம் மன்றாடுவது ஆகியவைகள், யூத யுக அறுவடையில் தொடங்கி, இந்நாள்வரை தொடர்ந்து நீடித்துக் கொண்டிருக்கின்றன. மேலும் யாக்கோபின் இக்கட்டு காலத்தின் இரண்டாம் கட்டத்தில் அதின் இறுதியான அம்சத்தை அடையும் *(சகரி.12:9-16). 1878*-ம் வருடம் வசந்த காலத்திலிருந்து மட்டுமே, மாம்ச இஸ்ரயேலர் களின் குருட்டாட்டம் படிப்படியாக நீக்கப்படுவதின் மூலமும், அவர்கள் படிப்படியாகத் தங்களுடைய சுய தேசத்திற்குத் திரும்ப வருவதின் மூலமும், தேவனுடைய தயவு அவர்களுக்குப் படிப்படியாகவும், அதிகமதிக மாகவும் வெளிப்படுத்தப்பட்டுக் கொண்டு வருகிறது.

*32. ஆதி. 27:39,40* அப்பொழுது அவன் தகப் பனாகிய ஈசாக்கு அவனுக்குப் பிரதியுத்தரமாக: உன் வாசஸ்தலம் பூமியின் சாரத்தோடும் உயர வானத் திலிருந்து இறங்கும் பனியோடும் இருக்கும். உன் பட்டயத்தினாலே நீ பிழைத்து, உன் சகோதரனைச் சேவிப் பாய்; நீ மேற்கொள்ளும் காலம் வரும்போதோ, உன்

கழுத்தில் இருக்கிற அவனுடைய நுகத்தடியை முறித்துப் போடுவாய் என்றான். தேவனுடைய அன்பென்ற இயல்பிலும், தெரிந்து கொள்ளப்படுதல் சம்பந்தமாகப் பட்சபாதமின்மை என்ற இயல்பிலும் செயல்படுகிற தேவன் (ஈசாக்கு) மாம்ச இஸ்ரயேலர்களின் (ஏசா) விண்ணப்பங்களையும் கண்ணீரையும் இரக்கத்தோடு கருதினார். மனுகுலத்தின் மத்தியில் பூரணப்படுத்தப்பட்ட பூமி (பூமியின் சாரத்தோடும்) அவர்களுடைய நித்திய வாசஸ்தலமாக இருக்கும் என்றும், அவர்கள் (தேவனிடத்திற்குத் திரும்பித் தங்களுடைய மேசியாவை ஏற்றுக் கொண்ட பிறகு - மத் 23:39) காலத்திற்குரிய சத்தியத்தின் ஆசீர்வாதங்களைப் (வானத்திலிருந்து இறங்கும் பனி யோடும்) பெற்றுக் கொள்வார்கள் என்றும் தேவன் அவர் களுக்கு வெளிப்படுத்தினார்.

33. மேலும் மில்லினிய யுகத்தில் அவர்கள் செய்யும் சாட்சி பகரும் ஊழியத்தில் கருத்துக்களை விவாதிக்கும் திறமையுள்ளவர்களாக இருப்பார்கள் (உன் பட்டயத்தினாலே நீ பிழைத்து; சங். 107:22; யோயே. 2:28; இஸ்மயேல் வில்வித்தையிலே வல்லவனாக இருப்பதின் மூலமும், கேத்தூராளின் நான்காம் குமாரனாகிய மீதியான் (சச்சரவு) என்பவனின் மூலமும் அடையாளப்படுத்தப் படுகிறது – ஆதி. 21:20; 25:2]. மேலும் கிறிஸ்து வகுப் பாரின் ஊழியக்காரர்களாகவும் இருப்பார்கள் (உன் சகோ தரனைச் சேவிப்பாய்). மேலும் மில்லினிய யுகத்தின் முடி வில், அவர்களுடைய விசுவாச உண்மைத்துவமுள்ள அங்கத்தினர்களுக்கு ராஜ்யத்தின் பூமிக்குரிய பகுதியின் மேல் ஆளும் உரிமை கொடுக்கப்பட்ட பிறகும் (மத்.25:34) இஸ்ரயேல் வீட்டாருடன் புது உடன்படிக்கை முழுமை யாக ஸ்தாபிக்கப்பட்ட பிறகும் (எரே. 31:33, 34; 32:38-41), அவர்கள் முழுமையாகப் பூரணப்படுத்தப்பட்டு முழுமை யாக பரீட்சிக்கப்பட்ட பிறகும் - அப்போது மட்டுமே அவர்கள் மத்தியஸ்தராகவும் நியாயாதிபதியாகவும் செயல்படுகிற கிறிஸ்து வகுப்பாருக்குக் கீழ்ப்பட்ட நிலையிலிருந்து விடுவிக்கப்பட்டுத் தேவனுடைய பிள்ளைகளுக்குரிய முழுமையான சுதந்தரத்தைப் பெற்றுக் கொள்வார்கள் (உன் கழுத்திலிருக்கிற அவனு டைய நுகத்தடியை முறித்துப் போடுவாய்; ரோம. 8:20).

34. இவ்வாறாக மாம்ச இஸ்ரயேலர்கள் தெய்வீக தன்மையைப் பெற்றுக் கொள்ளும் சிலாக்கியம் மற்றும் கிறிஸ்துவோடு உடன்சுதந்தரவாளிகளாக இருக்கும் சிலாக்கியமென்னும் உயர்வான தயவிலிருந்து தள்ளப் பட்டிருந்தாலும், கீழ்நிலையில் ஒரு ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்வார்கள். அதாவது மில்லினிய யுகத்தில் பூமியிலிருக்கும் எல்லா ஜாதிகளின் மத்தியில் முதன்மை யான நிலையிலிருப்பார்கள். மேலும் மில்லினிய யுகத்திற்குப் பிறகு செம்மறியாட்டு வகுப்பாரில் சுதந்தரத் தைப் பெற்றுக் கொள்வார்கள் (அவர்களுக்குரிய இந்த முதன்மையான இடமும் சுதந்தரமும் ஈசாக்கின் உடைமை களின் மூலம் அடையாளப்படுத்தப்படுகின்றன). ஆவிக் குரிய இஸ்ரயேலர்களோ, சற்றுமுன் குறிப்பிடப்பட்ட கீழ்நிலையான ஆசீர்வாதத்தை விட்டுவிட்டாலும், உயர் வான தயவைப் பெற்றுக் கொள்கிறார்கள்.

### ஏசா யாக்கோபைப் பகைப்பது

35. ஆதி. 27:41,42 யாக்கோபைத் தன் தகப்பன் ஆசீர்வதித்ததினிமித்தம் ஏசா யாக்கோபைப் பகைத்து: என் தகப்பனுக்காகத் துக்கிக்கும் நாட்கள் சீக்கிரமாய் வரும், அப்பொழுது என் சகோதரனாகிய யாக்கோபைக் கொன்றுபோடுவேன் என்று ஏசா தன் இருதயத்திலே சொல்லிக்கொண்டான். மூத்த மகனாகிய ஏசாவின் வார்த்தைகள் ரெபெக்காளுக்கு அறிவிக்கப்பட்டது; அப் பொழுது அவள் தன் இளைய மகனாகிய யாக்கோபை அழைத்து: உன் சகோதரனாகிய ஏசா உன்னைக் கொன்று போட நினைத்து, தன்னைத் தேற்றிக்கொள்ளு கிறான். பட்சபாதமின்மை என்ற இயல்பில் தேவன் (ஈசாக்கு) செயல்பட்டு, யூத யுக அறுவடையில் பெயரள விலான மாம்ச இஸ்ரயேலர்களுக்கு (ஏசா) மேலே குறிப் பிடப்பட்ட தீர்க்கதரிசன குறிப்புகளைத் தெரிவித்த பிறகு, மாம்ச இஸ்ரயேலர்கள் பொறாமையினால் ஆவிக்குரிய இஸ்ரயேலர்களைப் (யாக்கோபு)பகைத்து வெறுத்தார் கள். ஏனென்றால் உடன்படிக்கையின் பிரதான ஆசீர் வாதம் மாம்ச இஸ்ரயேலர்களுக்குப் பதிலாக ஆவிக்குரிய இஸ்ரயேலர்களுக்குக் கொடுக்கப்பட்டது. ஆகையால் மாம்ச இஸ்ரயேலர்கள் ஆவிக்குரிய இஸ்ரயேலர்களைத் துன்புறுத்தி, ஏற்றகாலம் வரும்போது அவர்களை அழிக்கத் திட்டமிட்டார்கள் (யோவா. 15:18-25; அப். 7:51-60; 13:44- 51; 14:19; 17:5; 1 தெச. 2:15, 16). பெயரளவிலான மாம்ச இஸ்ரயேலர்களின் இந்த பொறாமை நிறைந்த; கொலை செய்யும் நோக்கங்கள் ஆவிக்குரிய வாக்குத்தத் தங்களைப் பிரயோகிப்பவர்களின் (ரெபெக்காள்) கவனத் திற்குக் கொண்டு வரப்பட்டன. அவர்கள் அவைகளை ஆவிக்குரிய இஸ்ரயேலர்களுக்குத் தெரிவித்தார்கள்.

36. ஆதி. 27:43-45 ஆகையால், என் மகனே, நான் சொல்வதைக் கேட்டு, எழுந்து புறப்பட்டு, ஆரானில் இருக்கிற என் சகோதரனாகிய லாபானிடத்துக்கு ஓடிப் போய், உன் சகோதரனுடைய கோபம் தணியுமட்டும் சில நாள் அவனிடத்திலே இரு. உன் சகோதரன் உன்மேல் வைத்த கோபம் தணிந்து, நீ அவனுக்குச் செய்ததை அவன் மறந்தபின், நான் ஆள் அனுப்பி, அவ்விடத் திலிருந்து உன்னை அழைப்பிப்பேன்; நான் ஒரே நாளில் உங்கள் இருவரையும் ஏன் இழந்துபோகவேண்டும் என்றாள் யூத யுக அறுவடையின் காலத்திலும், அதற்குச் சற்று பிறகும் ஆவிக்குரிய இஸ்ரயேலர்கள் (யாக்கோபு) மாம்ச இஸ்ரயேலர்களிடமிருந்து (ஏசா) தப்பித்துச் சென்று, சுவிசேஷ யுகத்தில் [ஆரான் (வறண்ட)] அவர் களோடு நெருங்கிய பந்தமுடைய (என் சகோதரனாகிய ) தேவனுடைய பெயரளவிலான ஜனங்களின் மத்தி யிலுள்ள சில தலைவர்களிடம் (லாபான்) செல்ல வேண்டு மென்று அந்த வாக்குத்தத்தங்களைப் பிரயோகிப்பவர்கள் (ரெபெக்காள்) கொடுத்த கட்டளைகளுக்கு ஆவிக்குரிய இஸ்ரயேலர்கள் (யாக்கோபு) கீழ்ப்படிய வேண்டுமென்று அவர்களிடம் சொன்னார்கள். மாம்ச இஸ்ரயேலர்களின் கொலை செய்யும் கோபமும், துன்புறுத்தும் மனநிலையும் தணியும்வரை குறிப்பிட்ட கால அளவிற்கு ஆவிக்குரிய இஸ்ரயேலர்கள் சுவிசேஷ யுகத்தின் பெயரளவிலான தேவ ஜனங்களுடன் இருக்க வேண்டும். அதற்குப்பிறகு (1878 முதல்), கிறிஸ்துவின் நாமத்திற்கு எதிராகவும் அவரு டைய சீஷர்களுக்கு எதிராகவும் மாம்ச இஸ்ரயேலர்கள் கொண்ட தப்பெண்ணம் தணிந்து, அவர்களிடம் அதிக சகிப்புடன் செயல்படுவார்கள். அப்பொழுது, அதாவது 1878முதற் கொண்டு, ஆவிக்குரிய வாக்குத்தத்தங்களும் அவைகளைப் பிரயோகிப்பவர்களும், பாபிலோனிலுள்ள மத தலைவர்களின் தாக்கத்திலிருந்தும் கண்காணிப் பிலிருந்தும் சிறுமந்தை வகுப்பார் திரும்ப வர வேண்டு மென்று அவர்களை அழைப்பார்கள் (வெளி.18:4).

37. யூத யுக அறுவடை காலத்திலும் அதற்குச் சற்றுபிறகும், ஆபிரகாமின் வாக்குத்தத்தங்களைப் பிரயோகிப்பவர்கள் (ரெபெக்காள்) பின்வரும் காரியத்தை உணர்ந்தார்கள். சுவிசேஷ யுகத்தில் மாம்ச

இஸ்ரயேலர்களும் ஆவிக்குரிய இஸ்ரயேலர்களும் ஒருவர் மற்றொருவரிடமிருந்து பிரிந்திருப்பது நலமானதாகும் *(லூக் 16:26)*. ஏனென்றால் மாம்ச இஸ்ரயேலர்கள் இவ்வித துன்புறுத்தும் ஆவியுடையவர்களாக இருக்கும்போது, அந்த இரு வகுப்பார்களும் சேர்ந்திருந்தால், மாம்ச இஸ்ரயேலர்கள் சரீர ரீதியாக ஆவிக்குரிய இஸ்ரயேலர்களை அழிக்கக் கூடும். அதே நேரத்தில் மாம்ச இஸ்ரயேலர்கள் உடன்படிக்கையின் பிள்ளைகளாக இருக்க இனி தகுதியில்லாதவர்களாக இருக்குமளவிற்குத் தங்கள் மேல் குற்றப்பழியை வருவித்துக் கொள்ளக்கூடும். உடன்படிக்கையைப் பிரயோகிப்பவர்கள் இவ்விதமான ஒரு முடிவை விரும்பவில்லை.

*38.* மாம்ச இஸ்ரயேலர்கள் மற்றும் ஆவிக்குரிய இஸ்ரயேலர்கள் சம்பந்தமாகவும், தேவனுடைய பட்சபாதமின்மை சம்பந்தமாகவும், அவருடைய ஏற்ற காலத்தில், அவருக்கேற்ற வழியில் இரு இஸ்ரயேலர்களையும் ஆசீர்வதிப்பது சம்பந்தமாகவும் ஆதி. 27-ம் அதிகாரத்தில் கொடுக்கப்பட்ட அவருடைய வேதத்தின் "அதிசயங்களுக்காக" *(சங். 119:18)* நாம் தேவனைப் போற்றி துதிப்போமாக. இந்த காரியங்களைக் குறித்து நாம் சிந்திக்கும்போது தேவன் நம்மனைவரையும் வளமாக ஆசீர்வதிப்பாராக! *(கர்த்தருக்குச் சித்தமானால் ஆதி. 27:46 வசனத்தின் நிஜ நிறைவேறுதலை ஆதி. 28-ம் அதிகாரத்துடன் கருத்தில் கொள்வோம்).*

★★★★★★★★★★★★★★★★★★★★

## கூடுதலான பலத்தைப் பெற்றுக் கொள்வதற்காக (ஸ்திரப்படுத்தப்படுவதற்காக) தேவனுக்குக் காத்திருந்து திடமனதாயிருப்பது

***PT# 318, May 1945, pp. 74-79***

*"கர்த்தருக்குக் காத்திரு; அவர் உன் இருதயத்தை ஸ்திரப்படுத்துவார்; திடமனதாயிருந்து, கர்த்தருக்கே காத்திரு" (சங். 27:14)*

*1.* **ந**ம்முடைய பாட வசனத்தில் இரு புத்திமதிகளும் ஒரு வாக்குத்தத்தமும் இருக்கின்றன. இந்த இரு புத்திமதிகளுக்கும் கீழ்ப்படியும்போது மட்டுமே, அந்த வாக்குத்தத்தம் நிறைவேற்றப்படும். முதலாம் புத்திமதி "கர்த்தருக்குக் காத்திரு" என்பதாகும். மேலும் அந்த கருத்தை உறுதி செய்வதற்கு, இவ்வசனத்தின் கடைசி வாக்கிய தொடரில் திரும்ப அதே வார்த்தைகள் கூறப்படுகின்றன. கர்த்தருக்காகக் காத்திருப்பதென்பது பின்வரும் காரியத்தை அர்த்தப்படுத்துகிறது: ஒரு குறிப்பிட்ட காரியத்தில் கர்த்தர் அவருடைய சித்தத்தை வெளிப்படுத்துவதற்காக நாம் அவரை நோக்கிப் பார்த்துக் கொண்டிருக்கும் போது, அதைப் பற்றிய தமது சித்தத்தை அவர் வெளிப்படுத்தும் வரை அந்த காரியம் சம்பந்தமாக நாம் நம்மைக் கட்டுப்படுத்திக் கொண்டு, ஒன்றும் செய்யாமல் நீடித்திருப்பதாகும். ஆனால் அதற்கிடையில், கர்த்தர் ஏற்கனவே தம்முடைய சித்தத்தை வெளிப்படுத்தி இருப்பதால், நாம் செயல்பட வேண்டியதைக் கோருகிற காரியங்களில் நாம் ஒன்றும் செய்யாமலிருக்க வேண்டுமென்பதை இது அர்த்தப்படுத்தாது. ஆனால் கர்த்தர் இதுவரை தம்முடைய சித்தத்தை வெளிப்



படுத்தாத எந்த காரியத்தைக் குறித்தும், அவருடைய சித்தம் தெளிவாக வெளிப்படும் வரை நாம் எதையும் செய்யக் கூடாது என்பதையும் இது அர்த்தப்படுத்தும். ஏற்ற காலத்தில் அவர் தம்முடைய சித்தத்தை வெளிப்படுத்துவார் என்ற எதிர்பார்ப்புடன் காத்திருக்க வேண்டும்.

*2.* சில உதாரணங்கள் இதை நமக்கு மேலும் தெளிவாக்கும். இஸ்ரயேலர்கள் சிவந்த சமுத்திரத் தண்டையில் கர்த்தருக்காகக் காத்திருக்க வேண்டுமென்றும், அதற்குப் பிறகு அவர்கள் அவருடைய இரட்சிப்பைக் காண்பார்கள் என்றும் கர்த்தர் அவர்களுக்குக் கட்டளையிட்டிருந்தார். கடலின் நீரோட்டமும் காற்றுகளும் நீர்மட்டத்தின் கீழுள்ள பாறையை வெளிப்படுத்தும் வரை அந்த காத்திருத்தல் அவசியமாயிருந்தது. அந்த பாறைகள் வெளிப்பட்ட பிறகு அதில் அவர்கள் செல்ல வேண்டியதாயிருந்தது. அதற்கிடையில், இஸ்ரயேலர்களுக்கு வழிகாட்டும் ஸ்தம்பம் எகிப்தியர்களின் பக்கத்தில் இருளாகவும், இஸ்ரயேலர்களின் பக்கத்தில் வெளிச் சமாகவும் இருக்கும்படி செய்வதின் மூலம் கர்த்தர் இஸ்ரயேலர்களைப் பாதுகாத்தார். மேலும் கர்த்தருக்கு ஏற்ற காலம் வந்தபோது, இஸ்ரயேலர்கள் கால் நனையாமல் பாறைகளின்மேல் பாதுகாப்பாக முன்செல்லும்படி அவர்களுக்குக் கட்டளையிட்டார்.

*3.* நம்முடைய காரியங்களிலும் கர்த்தர் அவ்வாறே செயல்படுகிறார். ஒரு புது செயல்பாட்டுக்குள் நாம் பாதுகாப்பாக முன்செல்வதற்கு நம்மையும் அதில் அடங்கியுள்ள சூழ்நிலைகளையும் ஆயத்தப்படுத்துவதற்குத் தேவையான காரியங்களைக் கர்த்தர் செய்து முடிக்கும்வரை நம்மைக் காத்திருக்க வைப்பார். மேலும் அந்த காத்திருத்தலின் நேரத்தில் நமக்குத் தேவையான உதவியை நமக்களிப்பார். தாவீது தேவனுடைய சித்தத்தைக்கண்டு கொள்வதற்கு எப்பொழுதுமே ஏபோத்தின் மூலம் கர்த்தருடைய ஆலோசனையை நாடினார். மேலும் ஒரு குறிப்பிட்ட சூழ்நிலை சம்பந்தமாகக் கர்த்தர் தம்முடைய சித்தத்தை வெளிப்படுத்தும் வரை அவர் அதைக் குறித்து எதையும் செய்யாதிருந்தார். இதில் அவர் ஒரு சிறிய நிஜ நிறைவேறுதலில், கர்த்தருக்குக் காத்திருப்பதில் நம்முடைய பாஸ்டர் ரஸலை அடையாளப்

படுத்துகிறார். கர்த்தராகிய யெஷுஆவும் தேவனுக்காகக் காத்திருந்து, தேவன் தம்முடைய சித்தத்தை வெளிப் படுத்தும் வரை தம்முடைய ஊழியத்தைத் தொடங் காதிருந்ததில் இதற்கு மற்றொரு எடுத்துக்காட்டாயிருக் கிறார். பவுல் அப்போஸ்தலரும் இவ்வித ஒரு எடுத்துக் காட்டாக இருக்கிறார்.ஏனென்றால் தேவனுடைய சித்தத்தை அறிந்து கொள்வதற்கு அவர் அரபி தேசத் திற்குப் போய் அங்கே தங்கி இருந்தார். அவர் அவருடைய ஊழியத்தைத் தொடங்க வேண்டுமென்று வெளிப்படுத் தப்படும் வரை அதற்காகக் காத்திருந்தார்.

*4.* ஏதேனில் சாத்தான் கர்த்தருக்காகக் காத் திராமல், உயர்ந்த நிலையை அடைவதற்குத் துணிவாகச் செயல்பட்டான். விழுந்துபோன தேவதூதர்களும் ஜலப் பிரளயத்திற்கு முன்பு, கர்த்தருடைய சித்தத்தை அறிந்து கொள்ள நாடாமல், பிள்ளைகளைப் பெற்றெடுக்கத் துணிந்தார்கள். ஏனென்றால் அதன்மூலம் மரபு வழியாக வரும் சீர்கேட்டை நீக்கி, மனுஷனை உயர்த்தக் கூடு மென்று சாத்தான் புகுத்தின கருத்தினால் தூண்டப்பட்டு அவ்வாறு செய்தார்கள். யூதாஸும் இதே பண்பை வெளிப்படுத்தினான். கர்த்தரைக் காட்டிக் கொடுப்பதின் மூலம் ஒரு விதமான சூழ்நிலையை உருவாக்க நாடினான். அந்த சூழ்நிலையில் ஒரு பெரிய அற்புதத்தைச் செய் வதின் மூலம் தாம் மேசியாவாக இருப்பதை நிரூபிக் கும்படி கர்த்தராகிய யெஷுஆவைக் கட்டாயப்படுத்த நாடினான். அந்த அற்புதம் இஸ்ரயேலர்களை மனமாற்ற மடையச் செய்யுமென்றும் கர்த்தர் சிங்காசனத்தில் வீற் றிருக்க வழி நடத்துமென்றும், ரோம அரசாங்கத்தைக் கவிழ்த்து, இஸ்ரயேலை உயர்த்தி மனுகுலத்தை ஆசீர் வதிக்குமென்றும் எண்ணினான். மேசியாவைக் குறித்து யூதாஸ் வைத்திருந்த கருத்து இவ்வாறு நிறைவேற்றப் படுமென்று எண்ணினான். பொல்லாத ஊழியக்காரனும் (JF ரூதர் ஃபோர்டு) வாட்ச் டவர் சொசைட்டியில் நிர்வாகிக்கும் உரிமையையும் நடத்தும் உரிமையையும் அதிகாரத்தையும் பற்றிக் கொண்டு கர்த்தருக்காகக் காத்திராமல் துணிவுடன் செயல்பட்டார். அவர் இவ்வாறு அதிகாரத்தை அபகரிப்பதை எதிர்ப்பவர்களிடம் மிகவும் அநீதியாகச் செயல்பட்டு அவர்களைத் துன்புறுத்தினார் - கர்த்தருக்காகக் காத்திராமலிருப்பதற்கும் அதின் மோச மான விளைவுகளுக்கும் இவர்களெல்லோரும் எடுத்துக் காட்டுளாக இருக்கிறார்கள்.

## புதிய காரியங்களில் கர்த்தருக்காகக் காத்திருக்க வேண்டும்

*5.* கர்த்தருடைய சித்தம் என்னவென்று நாம் இன்னும் அறிந்து கொள்ளாத புதிய காரியங்களில் கர்த்தருக்குக் காத்திருக்க வேண்டும். அவர் தம்முடைய சித்தத்தை நமக்கு ஏற்கனவே வெளிப்படுத்தி இருக்கிற காரியங்களில், நாம் இவ்வாறு காத்திருப்பது ஏற்ற ஒன்றல்ல. இவ்வித காரியங்களில் நாம் அந்த செயல் பாட்டில் முன்னேற வேண்டுமென்பதே அவருடைய சித்தமாயிருக்கும். மேலும் அதை உடனடியாகச் செய்ய முன்னேறும்படிக்கு வைராக்கியம் நம்மைத் தூண்ட வேண்டும். அவ்வித வைராக்கியத்தை தேவன் பாராட்டுவார்.

*6.* எங்களுக்குத் தெரிந்த ஒரு பெண் (அவர் எப்பிஸ்கோப்பல் சபையைச் சேர்ந்தவளாகவும், தேவ பக்தியுள்ளவளாகவும் இருந்தாள்) கர்த்தருக்குக் காத் திருப்பது என்ற காரியத்தை மிதமிஞ்சிய விதத்தில் கடைப் பிடித்தாள். அவள் காலையில் விழித்தெழு வதற்குக் கர்த்தர் ஒரு குறிப்பிட்ட அடையாளத்தின் மூலம் தம்முடைய சித்தத்தை வெளிப்படுத்தும்வரை அவள் படுக்கையை விட்டு எழுந்திருக்க மாட்டாள். இவ்வித மான ஒரு காரியத்திலும், நாம் படுக்கைக்குச் செல்லும் நேரம், சாப்பிடும் நேரம், அன்றாட வாழ்க்கையின் காரியங்களைப் பொதுவாக ஒழுங்குப்படுத்துவது போன்ற காரியங்களிலும், ஒவ்வொரு முறையும் அவை களைச் செய்வதற்காக ஏதேனுமொரு குறிப்பிட்ட பரிபாலனம் நமக்கு அதைச் சுட்டிக் காட்ட வேண்டு மென்று எதிர்பார்க்கக் கூடாது. முறையான நடத்தை, ஒழுங்கு, வசதி, உபயோகம் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு இவ்விதமான காரியங்களைத் திட்டவட்டமாக அமைத்துக் கொள்ள வேண்டும். சில விதி விலக்கான நேரங்களைத் தவிர மற்ற நேரங்களில் இவ்வித காரியங் களில் நாம் முடிவு செய்தபடி நடந்து கொள்ள வேண்டும். இவைகளெல்லாம் தெளிந்த புத்தியினால் கட்டுப்படுத்தப் பட்ட சுயாதீனத்திற்குரிய காரியங்களாக இருக்கின்றன. ஆனால் புதிய கொள்கைகள், செயல்பாடுகள், நடத்தை, சூழ்நிலைகள், நிலைமைகள், அனுபவங்கள் ஆகிய வற்றைக் குறித்து முடிவு செய்வதில், அதாவது நாம் அவைகளைச் செய்ய வேண்டுமா, செய்ய வேண்டாமா என்று தீர்மானிப்பதற்கு, கர்த்தருக்குக் காத்திருக்க வேண்டும். அவருடைய வார்த்தையின் அடிப்படை கொள்கைகளின் மூலமும் உதாரணங்களின் மூலமும் நாம் கர்த்தருடைய சித்தத்தை அறிந்து கொள்ளும் வரை, அது சம்பந்தமாகச் செயல்படாமல் கர்த்தருக்குக் காத்திருக்க வேண்டும்.

*7.* சில நேரங்களில் நம்முடைய கடமைகள் ஒன்றுக்கொன்றுக்கு முரண்பாடாகத் தோன்றும்போது, அவருடைய வார்த்தையின் அடிப்படை கொள்கைகள் மற்றும் உதாரணங்களின் மூலம் மட்டுமே அவருடைய சித்தம் என்னவென்று நம்மால் தீர்மானிக்க முடியாது. சிக்கலான புதிய சூழ்நிலைகளில் இதை நாம் விசேஷ மாகக் காண்கிறோம். இவ்விதமான சூழ்நிலைகளில் நாம் நம்மிடமிருந்து சுய சித்தத்தையும் உலக சித்தத்தையும் அகற்றி, நம்மை வெறுமையாக்கிக் கொண்டு, கர்த்த - ருடைய சித்தத்தையே செய்யும் சித்தத்தினால் நிரப்பப்பட வேண்டும். அதற்குப் பிறகு இவ்விதமான ஒரு மனநிலையோடு, முரண்பாடாகத் தோன்றுகிற இருவகை யான வேதாகம அடிப்படை கொள்கைகள் மற்றும் உதாரணங்களில் எது கர்த்தருடைய சித்தமாக இருக் குமென்று நம்மிலுள்ள கர்த்தருடைய ஆவி நமக்குக் காண்பிப்பதை அறிந்து கொள்ள நாட வேண்டும். கர்த்த - ருடைய ஆவி ஒருவகையான கொள்கை மற்றும் உதாரணத்தோடு ஒத்திருந்து மற்றொன்றுக்கு முரண்பாடா யிருக்கும்போது அது நமக்குக் கர்த்தருடைய சித்தத்தைக் காண்பிக்கும். ஆனால் சில நேரங்களில் தேவ வார்த்தை மற்றும் தேவனுடைய ஆவியிலிருந்தும் கூட கர்த்தருடைய சித்தத்தை உறுதியாகத் தீர்மானிக்க இயலாதவர்களாக இருப்போம். இவ்விதமான நேரங் களில், தொடர்ந்து காத்திருந்து, தேவனுடைய பரிபால - னங்கள் வெளிப்படுவதற்காக விழித்திருக்க வேண்டும். தேவ வார்த்தை மற்றும் தேவ ஆவியோடு இணைந்த தெய்வீக பரிபாலனங்கள் கர்த்தருடைய சித்தத்தை தெளி வாகச் சுட்டிக் காட்டும். ஏனென்றால் அந்த காரியம் சம்பந்தமாக அவருடைய சித்தத்தை அறிந்து கொள்ள நாம் கொள்கிற இருதய ஏக்கத்தையும், நாம் தகுந்த விதத்தில் அவருக்காகக் காத்திருப்பதையும் அவர் கண்டு, ஏற்ற காலத்தில் தம்முடைய சித்தத்தை நமக்கு வெளிப்

படுத்துவார்.

## கர்த்தருக்குக் காத்திருப்பதற்கான காரணங்கள்

*8.* நாம் கர்த்தருக்கு ஏன் காத்திருக்க வேண்டும் என்பதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. நாம் எந்த காரணத்திற்காகக் காத்திருக்க வேண்டுமோ, அந்த காரியம் சம்பந்தமாக நம்முடைய அறியாமையின் காரணமாக நாம் கர்த்தருக்குக் காத்திருக்க வேண்டும். ஒரு காரியம் சம்பந்தமாக நாம் கர்த்தருடைய சித்தத்தை அறியாதிருக்கும்போது, அவர் அதை வெளிப்படுத்துவதற்காக நாம் காத்திருக்க வேண்டும். எல்லா காரியங்களிலும் அவருடைய சித்தத்தை நாம் புரிந்து கொள்ள கூடியவர்களாக இருந்திருந்தால், அவருக்குக் காத்திருப்பது தேவையாக இருந்திருக்காது. ஆனால் பல காரியங்களில் நாம் அதை அறியாதிருப்பதால் அவருக்குக் காத்திருக்க வேண்டும். மேலும் இவ்வித காரியங்களில் நாம் என்ன செய்ய வேண்டுமென்று அவர் விரும்புகிறாரோ, அதை அவர் நிச்சயமாக அறிந்திருப்பதால் அவருக்குக் காத்திருக்க வேண்டும். நாம் சுயசித்தத்தையும் உலக சித்தத்தையும் விட்டு விட்டிருப்பதால், கர்த்தருக்குக் காத்திருக்க நம்மிடம் கோரப்படும் காரியங்களில் சுயசித்தத்தையோ உலக சித்தத்தையோ நாம் பின்பற்றக் கூடாது. மேலும் நாம் அவருடைய சித்தத்தை நம்முடைய சொந்த சித்தமாக ஏற்றுக் கொண்டிருப்பதினால், அவருக்காகக் காத்திராமல், துணிவுடன் செயல்பட்டு, காரியங்களை நம்முடைய கையில் எடுத்துக் கொண்டு, அவைகளைச் செயல்படுத்தக் கூடாது. மாறாக அந்த காரியத்தில் அவர் தம்முடைய சித்தத்தை நமக்கு வெளிப்படுத்தும் வரை அவருக்குக் காத்திருக்க வேண்டும்.

*9.* நாம் அவருக்குக் காத்திருக்க வேண்டுமென்று அவர் விரும்புவதற்குப் பல நல்ல காரணங்கள் இருக்கின்றன. அவைகளில் ஒன்று இவ்வாறாயிருக்கிறது: கர்த்தருக்குக் காத்திராத ஒருவன் செய்கிற பாவங்களிலிருந்தும் தப்பறைகளிலிருந்தும் நம்மை இரட்சிக்க அவர் விரும்புகிறார். மேலும் இவ்வித பாவங்கள் மற்றும் தப்பறைகளின் விளைவாக வருகிற தீமைகளிலிருந்து நம்மைக் காப்பாற்ற அவர் விரும்புகிறார். மேலும் நமக்காக அவருடைய சித்தமாயிருக்கிற காரியங்களைச் செய்ய நாம் ஆயத்தமுள்ளவர்களாக இருப்பதற்கு முன்பு, நம்மில் ஒரு குறிப்பிட்ட அபிவிருத்தி நடைபெறுவது பலமுறை தேவையாயிருப்பதால் அவர் அதை விரும்புகிறார். ஆகையால் நாம் அந்த அபிவிருத்தியை அடையும்வரை, அவருடைய சித்தத்தை நமக்கு வெளிப்படுத்தாதிருக்கிறார். அடுத்ததாக, பல நேரங்களில், நாம் அவருடைய சித்தத்தைச் செய்வதைத் தடுக்கிற புறம்பான இடையூறுகள் நமக்கிருக்கின்றன. ஆகையால் நாம் அவருடைய சித்தத்தைச் செய்வதற்கு முன்பு அந்த இடையூறுகளை நீக்க அவர் விரும்புகிறார். ஆகையால் நாம் அவருக்குக் காத்திருக்க வேண்டுமென்று அவர் விரும்புகிறார். சிவந்த சமுத்திரத்தின் நீரோட்டமும், காற்றும் நீர்மட்டத்தின் கீழுள்ள பாறையை வெளிப்படுத்தும்வரை இஸ்ரயேலர்களை அங்கே காத்திருக்க வைப்பதில் இது சித்தரிக்கப்படுகிறது. ஏனென்றால் அந்த பாறைகளின் மேல் நடப்பதின் மூலம் மட்டுமே அவர்கள் அக்கரைக்குப் பாதுகாப்பாகச் செல்லக் கூடும். இவ்வாறாகக் காத்திருக்கும் போது, காத்திருக்கிறவன் எப்பொழுதுமே தேவனால் ஆசீர்வதிக்கப்படுவான். மேலும் காத்திருத்தலின் காலம் முடிவடைந்தபிறகு, வெளிப்படுத்தப்பட்ட தேவ சித்தத்தைச் செய்கிறவனும் எப்பொழுதுமே அவரால் ஆசீர்வதிக்கப்படுவான். ஆகையால் நாம் கர்த்தருக்குக் காத்திருக்க வேண்டுமென்பது அவருடைய சித்தமாக இருக்கிறது. இறுதியாக நாம் கர்த்தருக்குக் காத்திராமல், துணிவுடன் செயல்பட வேண்டுமென்று சாத்தான் விரும்புகிறான். நம்மைக் கீழ்ப்படியாமையுள்ளவர்களாக ஆக்கவும், நம்முடைய குணாம்சத்தைச் சேதப்படுத்தவும், நம்மை அவனுடைய அடிமைகளாக ஆக்கிக் கொள்ளவும், நம்முடைய அழைப்பு சம்பந்தமாக நமக்கு அழிவை உண்டாக்கவும் அவன் விரும்புவதால், நாம் கர்த்தருக்குக் காத்திராமல் துணிவுடன் செயல்படும்படி செய்ய அவன் நாடுகிறான்.

*10.* எந்த காரியத்தில் நாம் கர்த்தருக்குக் காத்திருக்கிறோமோ, அந்த காரியத்தில் அவருடைய சித்தத்தைக் கண்டு கொள்வதற்கு நமக்குத் தேவையான தகவலை அளிப்பதின் மூலம் ஏற்ற காலத்தில் கர்த்தர் நம்முடைய காத்திருத்தலை ஆசீர்வதிப்பார் என்று நாம் நிச்சயித்துக் கொள்ளக் கூடும். நம்முடைய அபிவிருத்தி சம்பந்தமாக நமக்கு என்ன தேவையென்று அவர் சரியாக அறிகிறார். நாம் அந்த அபிவிருத்தியைப் பெற நமக்கு எவ்வாறு திராணி அளிப்பதென்பதும் அவர் சிறப்பாக அறிகிறார்.மேலும் நாம் ஒவ்வொருவரும் எந்த வரிசையில் அந்த அபிவிருத்தியை அடைய வேண்டுமென்பதையும் அவர் அறிகிறார். ஏனென்றால் நம் ஒவ்வொருவருடைய மன இயல்புகள் வெவ்வேறாக இருப்பதால், நம்முடைய அபிவிருத்தியின் விதத்திலும் வரிசையிலும் வேறுபாடுகள் இருக்கின்றன. இந்த காரணத்தினாலேயே அவர் ஒருவனுடைய அனுபவங்களை மற்றவர்களின் அனுபவங்களிலிருந்து வித்தியாசப் படுத்துகிறார். வீழ்ச்சியானது நம் ஒவ்வொருவரையும் வெவ்வேறாகப் பாதித்ததினாலும், நம்முடைய இயற்கையான பயிற்சி மற்றும் சூழ்நிலைகள் வெவ்வேறாக இருந்ததினாலும், நம்முடைய தவறுகளை நம்மிடமிருந்து நீக்கி, நம்முடைய மன இயல்புகளையும், பற்றுதல்களையும், குணநலன்களையும், சித்தங்களையும் சரியான வழிகளில் அபி - விருத்தி செய்வதற்கு, நம் ஒவ்வொருவருக்கும் வெவ்வேறான பயிற்சி முறையும் அனுபவங்களும் தேவையாயிருக்கின்றன. நம்மைப் பயிற்றுவிக்கும் போது, தேவன் இந்த காரியங்களை எல்லாம் கருத்தில் கொண்டு, இந்த வெவ்வேறான சூழ்நிலைகளுக்கேற்ப வெவ்வே - றான போதனைகளையும் பரிபாலனங்களையும் அமைக்கிறார். இந்த காரியங்களெல்லாம் நாம் கர்த்தருக்குக் காத்திருக்க வேண்டிய சூழ்நிலைகளை உருவாக்குகின்றன.

*11.* மேலும் கர்த்தருக்குக் காத்திருப்பவர்கள் தான், தேவன் அவர்களில் கிரியை செய்வதற்குரிய இவ்வித சூழ்நிலைகளை அளிக்கிறார்கள். அவ்வித சூழ்நிலைகளில் கர்த்தர் அவர்கள் ஒவ்வொருவரிலும் தம்முடைய நோக்கங்களைச் சிறப்பாக நிறைவேற்றக் கூடும். மேலும் நமக்குத் தேவையான அனுபவங்களுக்கேற்ப, நம்முடைய உள்ளான மற்றும் புறம்பான சூழ்நிலைகளை நாம் மாற்றிக் கொள்ளும்படிக்கு, நமக்குத் தேவையான அறிவை அவர் நமக்கு நிச்சயமாகக் கொடுப்பார். மேலும் நம்மிலும், நம் மூலமாக மற்றவர்களிலும் உருவாக்க அவர் விரும்புகிற விளைவுகளைக் கொடுப்பதற்கு எந்த சூழ்நிலைகளுக்காக அவர் நம்மைக் காத்திருக்க வைத்தாரோ, அந்த சூழ்நிலைகளுக்கு நம்மைத் தகுதிப்படுத்திக் கொள்வதற்குத் தேவையான அறிவையும் அவர் நமக்குக் கொடுப்பார். அவர்

விரும்புகிற இந்த விளைவுகளாவன: *(1)* நம்மிலுள்ள தீமைகளை அகற்றுவது, *(2)* நம்மிலுள்ள நன்மையை அபிவிருத்தி செய்வது, *(3)* மற்றவர்கள் தங்களுடைய பெலவீனங்களையும் தவறுகளையும் மேற்கொள்வதற் - கும், அவர்களுடைய குறைவுகளை நிறைவாக்குவதற்கும், தேவ வார்த்தையைத் தியானிப்பதின் மூலமும், பரப்பு வதின் மூலமும், அப்பியாசிப்பதின் மூலமும் அவர்களில் நன்மையை அதிகரிக்கச் செய்வதற்கும், அதினால் வரும் சோதனைகளைப் பயன் விளைவிக்கும் விதத்தில் சகிப் பதற்கும், அவர்களுக்கு உதவ நம்மை உபயோகிப்பது. நாம் இவ்விதமாகக் காத்திருக்கும் போது, அந்த சூழ் நிலைக்கேற்ற சத்தியத்தை நமக்கு அளிப்பதின் மூலமும், அவருடைய மகிமைக்காகவும், மற்றவர்களின் நன்மைக் காகவும், நம்முடைய நன்மைக்காகவும் அந்த சத்தியத்தை உபயோகிக்க நம்மை ஊக்குவிப்பதின் மூலமும் அந்த காத்திருத்தலை ஆசீர்வதிக்கிறார். அவ்வாறு காத்திருப்ப தற்குத் தேவையான உதவி அளிக்கப்படாமல், தேவ னுடைய பிள்ளை ஒருபோதும் விட்டுவிடப்பட்டதில்லை. மேலும் அவனுடைய காத்திருத்தலின் மூலம் அவனுக் குள்ளும் அவன் வழியாகவும் உருவாக்கத் தேவன் திட்டமிட்ட நன்மையினால் அவனுடைய காத்திருத்தல் எப்பொழுதுமே ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறது. இவ்வித மான காத்திருத்தலின் ஆவி தேவனை நிச்சயமாகப் பிரியப்படுத்தும். ஏனென்றால் பிரதிஷ்டையில் சுயத்திற் கும் உலகத்திற்கும் மரித்திருந்து, தேவனுக்கென்று பிழைத்திருப்பதில் நாம் வெளிப்படுத்துகிற விசுவாச உண்மைத்துவத்தை அவருக்கு நிரூபிக்கிறது. ஆகையால் கர்த்தருக்குக் காத்திருங்கள்.

## எந்த ஆவியில் கர்த்தருக்குக் காத்திருக்க வேண்டும்?

*12.* ஏசா. *30:15*-ம் வசனத்தில், நாம் எந்த ஆவியில் கர்த்தருக்குக் காத்திருக்க வேண்டுமோ, அந்த ஆவியைக் குறித்து அவர் நமக்குத் தெரிவிக்கிறார்: "அமரிக்கையும் நம்பிக்கையுமே *(confidence* - தைரிய உறுதி*)* உங்கள் பெலனாயிருக்கும்". நாம் காத்திருக்கும் காலத்தில், காத்திருத்தலை விட்டுவிட்டு, காரியங்களை நம்முடைய கைகளில் எடுத்துக் கொண்டு, நம்முடைய சித்தத் திற்கேற்ப அவைகளை நடத்துவதின் மூலம் துணிவுடன் செயல்படும்படி செய்ய பல்வேறு தந்திரங்களின் மூலமும் வழிகளின் மூலமும் சாத்தான் முயலுவான். இந்த விஷயத்தில் அவனோடு ஒத்துழைக்க நம்முடைய மாம்சமும் நாடும். அதே விளைவுகளைக் கொண்டுவர அவனுடைய கூட்டாளியாக உலகமும் செயல்படும். நாம் கர்த்தருக்குக் காத்திருப்பதை வேறெந்த விதத்திலும் தடுக்க அவனால் இயலாதபோது, காத்திருத்தலின் காலம் முடிந்துவிட்டதென்று தேவனுடைய பரிபாலனங்கள் காண்பிப்பதாக நாம் தவறாக எண்ணும்படிக்கு, நம்மைச் சுற்றியுள்ள சூழ்நிலைகளைக் கையாள அவன் நாடுவான். சில நேரங்களில் அந்த சூழ்நிலைகளில் துரிதமாகச் செயல் படும்படி நம்மை அந்த சூழ்நிலைகளே தூண்டிவிடும். நம்மைத் துரிதப்படுத்தவும், நம்மை இடறலடைய செய்ய வும், அதன் மூலம் கர்த்தருக்குக் காத்திருப்பதை விட்டுவிடச் செய்யவும் தீவிரமான முயற்சிகள் செய்யப் படும்.

*13.* இவ்விதமான நேரங்களில் நாம் ஏற்ற காலத் திற்கு முன்பே தூண்டப்பட்டு, முயற்சியைக் கையாளும் படி உணர்ச்சிகளுக்கு இடங் கொடுக்கக் கூடாது. இவ்விதமான சூழ்நிலைகளில் அமர்ந்திருந்து நம்முடைய ஆத்துமாக்களைக் காத்துக் கொள்வதும், கர்த்தருக்காக அமைதியுடன் காத்திருப்பதும் நமக்குரிய காலமாகும். பதட்டமின்மையும் அமைதியும் நம்முடைய சிறப்பியல் புகளாக இருக்க வேண்டும். இவ்வாறாக நாம் சஞ்சலப் படாதபடி நம்மை காத்துக் கொள்ள வேண்டும். அமைதி மற்றும் சாந்தம் என்பவைகள் நம்முடைய சிறப்பியல் புகளாக இருக்க வேண்டும். நாம் பதட்டமடையாதபடி நம்மை காத்துக் கொள்ள வேண்டும். நாம் விசுவாச உண்மைத்துவமுள்ளவர்களாக இருக்கும்வரை கர்த்தர் நம்மை விட்டுவிட மாட்டார், நம்மை கைவிட மாட்டார், நம்மை விட்டு விலகவும் மாட்டார் என்றும், நாம் அவருக்குக் காத்திருக்கும் போது நமக்காதரவாக நிற்பார் என்றும் நாம் அறிந்து கொள்ளும்போது இந்த அமைதி இன்னும் உகந்ததாயிருக்கும். இவ்விதமான அமைதியின் ஆவி ஒவ்வொரு கொத்தளிப்பையும் அமர்த்தும், ஒவ் வொரு எதிர் காற்றையும் அமைதலாக்கும், ஒவ்வொரு புயலையும் அடக்கும். நாம் நம்முடைய புகலிடத்திற்குத் தூரமாக இருந்தாலும் பூரண சமாதானத்துடன், எல்லா புத்திக்கும் மேலான சமாதானத்துடன் நம்மைக் காத்துக் கொள்வார்.

*14.* நாம் எந்த ஆவியில் கர்த்தருக்குக் காத்திருக்க வேண்டுமோ, அது நம்பிக்கையின் *(தைரிய உறுதியின்)* ஆவியாகவும் இருக்க வேண்டும். நாம் கர்த்தருக்குக் காத்திருக்கும்போது விசுவாசத்தின் முழு நிச்சயம் நம் முடைய இருதயங்களை நிரப்ப வேண்டும். தேவன் நம் பட்சத்திலிருக்கிறார் என்றும், நாம் அவருக்காகக் காத் திருப்பது ஏன் அவசியமென்றும் நாம் காண இயலாத போதிலும்கூட, அது அவருக்கு மகிமையுண்டாக்குவ தினாலும் நமக்கு நன்மை விளைவிப்பதினாலும், மற்றவர் களுக்குப் பிரயோஜனமாக இருப்பதினாலும் அவர் நம்மைக் காத்திருக்க வைக்கிறார் என்றும் நாம் முழு நிச்சயத்துடன் நம்ப வேண்டும். அவர் சகலத்தையும் நம்முடைய நன்மைக்கேதுவாக நடப்பிக்கிறார் என்று முழுமையாக நம்ப வேண்டும். ஆகையால் இந்த விஷயங் களில் அவருடைய சித்தம் என்னவாக இருக்கக்கூடும் என்பது சம்பந்தமாக இப்பொழுது நமக்கிருக்கிற நிச்சய மின்மையும், நாம் அவருக்காகக் காத்திருப்பதும் கூட, நம்முடைய நன்மைக்கேதுவாக நடக்கிறது என்பதையும் நாம் உறுதியாக நம்ப வேண்டும். ஏற்ற காலத்தில் கர்த்தர் அவருடைய வார்த்தையிலிருந்தும், அவருடைய பரிபால னங்கள் மற்றும் அவருடைய ஆவியின் மூலமும் தேவை யான வெளிச்சத்தை நமக்களிப்பார் என்றும் விரைவில் இந்த அந்தகாரம் நீக்கப்பட்டு வெளிச்சத்திற்கு இடங் கொடுக்கப்படும் என்றும், அதற்கிடையில் நம்முடைய "நாட்களுக்குத் தக்கதாய்" நம்முடைய "பெலனும்" இருக்கும் என்றும் நாம் நிச்சயமாக இருக்க வேண்டும் *(உபா. 33:25)*.

*15.* இந்த காரியங்கள் சம்பந்தமாக நம்முடைய இருதயங்களுக்கு உறுதியளிக்க இன்னும் அதிகம் தேவைப்பட்டால், இது சம்பந்தப்பட்ட மற்ற வேத வசனங்களை நினைவு கூர்ந்து இது சம்பந்தப்பட்ட வேதாகம எடுத்துக்காட்டுகளைக் குறித்து சிந்திப் போமாக. நமக்கு இவ்வித நிச்சயத்தைக் கொடுப்பதற்கு இதைவிட அதிகம் தேவைப்பட்டால், கர்த்தருக்குக் காத் திருப்பது சம்பந்தமாக நமக்கு முற்காலத்திலிருந்த அனுபவங்களையும், நாம் அவ்வாறு காத்திருந்த போது கர்த்தர் தம்முடைய சித்தத்தின் தெளிவான வெளிப் பாடுகளின் மூலம் கொடுத்த வெளிச்சம் மற்றும் பெலத்தின் நிச்சயமான பதில்களுடன் அந்த காத்திருத்தல்

கனப்படுத்தப்பட்டிருந்ததையும் நினைவு கூருவோமாக. கர்த்தருக்காகக் காத்திருந்த மற்றவர்களின் அனுபவங்களைக் குறித்துத் தியானிப்பதும் கர்த்தருக்குக் காத்திருக்க நமக்கு உதவும். ஏனென்றால் கர்த்தருக்குக் காத்திருப்பவர்கள் ஒருபோதும் வெட்கப்படுவதில்லை. அதற்கு மாறாக அவர்கள் சீயோன் பர்வதத்தைப் போல் அசைக்கப்படக் கூடாதவர்களாக இருப்பார்கள். ஏனென்றால் இவ்வாறு காத்திருப்பவர்கள் கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களாய் இருப்பார்கள், ஆகையால் அமரிக்கையும் தைரிய உறுதியுமுள்ள ஆவியோடு கர்த்தருக்குக் காத்திருப்போமாக.

## திடமனதாயிரு

*16.* இப்பொழுது நாம் நம்முடைய பாட வசனத்தின் இரண்டாம் புத்திமதியாகிய *"திடமனதாயிரு"* என்பதை ஆராய ஆயத்தமாயிருக்கிறோம். இவ்வசனம் நம்மை உடல்ரீதியாகத் திடனுடன் இருப்பதைப் புத்திமதியாகச் சொல்லவில்லை. கர்த்தருடைய ஜனங்களில் மிக சிலர் மட்டுமே உடல்ரீதியாக பலமுள்ளவர்களாக இருக்கிறார்கள். மேலும் அவர்கள் அனைவரும் தங்களுடைய பிரதிஷ்டைக்கு உண்மைத்துவமாயிருக்கும்போது உடல்ரீதியாக இன்னும் பெலவீனமடைகிறார்கள். ஆகையால் இங்கே அர்த்தப்படுத்தப்பட்ட காரியம் சரீர பெலன் அல்ல. மாறாக அது மனம் இருதயம் மற்றும் சித்தத்தின் பெலனை அர்த்தப்படுத்துகிறது. விசேஷமாக மனம் மற்றும் இருதயத்தின் உறுதியை அர்த்தப்படுத்துகிறது.தேவனுடைய குணாம்சத்தின் ஒரு இயல்பாக நாம் வல்லமை என்ற வார்த்தையை உபயோகிக்கும்போது நாம் அர்த்தப்படுத்துகிற அதே கருத்து இவ்வசனத்தில் குறிப்பிடப்படுகிறது. ஏனென்றால் குணாம்ச இயல்பாகத் தேவனுடைய வல்லமை என்பது, அவருடைய இருத்தலுக்குரிய இயல்பாகிய சர்வ வல்லமையை அர்த்தப்படுத்தவில்லை. மாறாக அவருடைய சித்தத்தின் வல்லமையை அர்த்தப்படுத்துகிறது - இது ஒரு குணநலனாக இருக்கிறது. இவ்வாறாகத் தேவனுடைய ஜனங்கள் அவர்களுடைய மனம் மற்றும் இருதயத்தின் மூலம் செயல்படுகிற சித்தத்தின் வல்லமையில் திடன் கொள்ள வேண்டுமென்று நம்முடைய பாட வசனம் புத்திமதி கூறுகிறது. ஒரு குணாம்ச இயல்பாக வல்லமை (பெலன்) என்பதில் இரு உட்கூறுகள் இருக்கின்றன: சுயகட்டுப்பாடு மற்றும் பொறுமை. 2பேது. *1:6*-ம் வசனத்தில் பரிசுத்த பேதுரு செய்கிற ஆய்விலிருந்து இதை நாம் புரிந்து கொள்கிறோம். ஏனென்றால் அவர் கொடுக்கிற கூட்டல் கணக்கில் *(2பேது. 1:5-7)*, அவர் அன்பைத் தவிர, ஞானம் வல்லமை மற்றும் நீதி என்ற பண்புகளின் உட்கூறுகளை நமக்குக் கொடுக்கிறார்: *(1)* விசுவாசம், தைரியம் (வெற்றிக்கான நம்பிக்கை தைரியத்தின் இருதயமாக இருக்கிறது) மற்றும் அறிவு என்பவைகள் ஞானத்தின் உட்கூறுகளாக இருக்கின்றன, *(2)* சுயகட்டுப்பாடு மற்றும் பொறுமை வல்லமையின் உட்கூறுகளாக இருக்கின்றன, *(3)* தேவபக்தி மற்றும் சகோதர சிநேகம் நீதியின் உட்கூறுகளாக இருக்கின்றன.

*17.* இவ்வாறாக நம்முடைய பாட வசனத்தின் இரண்டாம் புத்திமதியானது, சுயகட்டுப்பாட்டுடனும், பொறுமையுடனும் இருக்க நம்மை ஊக்குவிக்கிறது. திடமனதாயிரு, பொறுமை என்ற வேதாகம வார்த்தையானது, இக்காலத்தில் பொதுவாக அர்த்தப்படுத்துவதை போல், நீடிய சகிப்பை அர்த்தப்படுத்துவதில்லை. மாறாக இடையூறுகளின் மத்தியிலும்கூட, அவைகளை மகிழ்ச்சியோடு சகித்து, நன்மை செய்வதில் விடாமுயற்சியோடிருப்பதை அர்த்தப்படுத்தும். சுயகட்டுப்பாடு என்பதின் அர்த்தம் அந்த வார்த்தையிலிருந்தே தெளிவாக இருக்கிறது. பொதுவான சூழ்நிலைகளின் மத்தியில், அதாவது சாதாரணமான மற்றும் எளிமையான சூழ்நிலைகளின் மத்தியில் நன்மை செய்யும்படி நம்முடைய மனதையும் பற்றுதல்களையும் குணநலன்களையும் ஆண்டு கொள்கிற சித்தத்தின் பெலனாகும். ஆனால் பொறுமை என்பது கடினமான சூழ்நிலைகளின் மத்தியில், அவைகளை மகிழ்ச்சியோடு சகித்துக் கொண்டு, நன்மை செய்வதில் நம்முடைய மனதையும் பற்றுதல்களையும் குணநலன்களையும் ஆண்டு கொள்கிற சித்தத்தின் பெலனாகும்.

*18.* பொறுமை மற்றும் சுயகட்டுப்பாடு என்பவைகளுக்கிடையிலுள்ள இந்த வித்தியாசத்தைப் பல பெட்டிகளை உடைய பெரிய புகை வண்டியை இழுக்கிற இயந்திரத்தின் *(engine)* மூலம் எளிதாகச் சித்தரிக்கப்படக் கூடும். தண்டவாள பாதை சமதளத்திலிருக்கும் போது, புகை வண்டியை இழுப்பதற்கு ஒரு இயந்திரம் போதுமானதாக இருக்கும். இவ்வாறாக நன்மை செய்யும் பாதையில் நமக்கு எவ்வித கஷ்டங்கள் இல்லாதிருக்கும்போது, நன்மை செய்வதில் நம்முடைய மனதையும், பற்றுதல்களையும், குணநலன்களையும் ஆண்டு கொள்வதற்குச் சுயகட்டுப்பாடு போதுமானதாக இருக்கும். ஆனால் பாரமான பல பெட்டிகளைக் கொண்ட நீளமான புகை வண்டியை இழுக்கிற ஒரு இயந்திரம் செங்குத்தான மேட்டை எதிர்கொள்ளும் போது, அந்த மேட்டை கடந்து செல்வதற்கு அந்த ஒரு இயந்திரத்தின் ஆற்றல் போதாததாக இருக்கும். அதைவிட அதிக ஆற்றலுள்ள இயந்திரத்தின் மூலம் அதற்குக் கூடுதலான சக்தி அளிக்கப்படுவது தேவையாயிருக்கும். இரு இயந்திரங்களின் சக்தி கூட்டப்படும்போது செங்குத்தான மேட்டை கடந்து செல்லக்கூடும். அதுபோலவே நன்மை செய்யும் பாதையில் இடையூறுகள் எழும்பும் போது, நன்மை செய்வதில் நம்முடைய மனதையும், பற்றுதல்களையும், குணநலன்களையும் ஆண்டு கொள்வது சுயகட்டுப்பாட்டுக்கு மட்டும் கடினமாயிருக்கும். அவ்வாறிருக்கும்போது சுயகட்டுப்பாட்டுக்கு அதிக பெலனை அளிக்க பொறுமை தேவையாயிருக்கும். ஏனென்றால் இடையூறுகளின் மத்தியில், அவைகளை மகிழ்ச்சியோடு சகித்து, நன்மை செய்வதில் விடாமுயற்சியோடிருப்பது பொறுமையாகும். இவ்வாறாகச் சுயகட்டுப்பாடு மற்றும் பொறுமை - இவ்விரண்டின் பெலன்கள் இணையும்போது நன்மை செய்யும் பாதையை வெற்றிகரமாகக் கடந்து செல்லக் கூடும்.

*19.* நாம் வேத வசனங்களையும் எடுத்துக்காட்டுகளையும், மற்றவர்களின் அனுபவங்களையும், நம்முடைய அனுபவங்களையும் ஆராய்ந்து பார்க்கும் போது இந்த வரையறைகள் உண்மையாயிருப்பதைக் காண்போம். சுயகட்டுப்பாட்டின் சில எடுத்துக்காட்டுகளாவன: சவுல் *(1சாமு. 10:27)*, தாவீது *(1 சாமு. 24:1-15; 26: 1-20)*, யெஷூஆ *(மத். 26:62, 63; 27:12-14)*. பொறுமையின் சில எடுத்துக்காட்டுகளாவன: யோபு *(யாக். 5:11)*, பவுல் *(2தீமோ. 3:10)*, தெசலோனிக்கியர்கள் *(2தெச. 1:4)*, யோவான் அப்போஸ்தலர் *(வெளி. 1:9)*.

*20.* இந்த புத்திமதி மிகவும் தேவையானதாயிருக்கிறது. வல்லமையின் இரு உட்கூறுகளிலும் (சுயகட்டுப்பாடு மற்றும் பொறுமை) அது ஒரு காரியத்தை செயல்படுத்தும் வேலையைச் *(executory)* செய்கிறது. அது இவ்வாறு செயல்படும்: ஞானமானது ஒரு திட்டத்தைத்

தீட்டி, அதைச் செயல்படுத்தும் படி வல்லமையிடம் ஒப் - படைக்கிறது. வல்லமை அந்த திட்டத்தை நிறைவேற்றும் படி அதைப் பற்றிக் கொள்ளும். ஆனால் அதைச் செய்ய முயலுவதற்கு முன், ஞானம் தீட்டிய அந்த திட்டத்தைச் செயல்படுத்துவதைத் தூண்டும் நோக்கங்களாக நீதியை *[தேவனிடத்தில் கடமை அன்பு (தேவபக்தி) மற்றும் மனிதனிடத்தில் கடமை அன்பு (சகோதர சிநேகம்)]* மற்றும் தியாக அன்பைத் திரட்டும்.

*21.* அதற்குப் பிறகு, எவ்வித விசேஷித்த இடையூறுகளும் இல்லாத சூழ்நிலைகளின் மத்தியில், வல்லமையானது, சுயகட்டுப்பாடென்ற உட்கூறின் மூலம் செயல் பட்டு, ஞானம் திட்டமிட்டதும், இப்பொழுது நீதியினாலும் அன்பினாலும் ஊக்குவிக்கப்படுகிறதுமான அந்த திட்டத்தை நிறைவேற்றுவதற்கு, நீதிக்கும் அன்புக்கும் அதின் (சுயகட்டுப்பாட்டின்)பெலனை அளித்து, அதின் திட்டத்தை நிறைவேற்ற அவைகளை உந்தி தள்ளும். இந்த சூழ்நிலைகளில் அந்த திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு இது மட்டுமே போதுமானதாக இருக்கும். ஆனால் சுயகட்டுப்பாட்டினால் மட்டுமே எதிர் கொள்ள முடியாத அளவிற்குக் கடினமான இடையூறுகள் எழும்பும்போது, சுயகட்டுப்பாட்டிற்கு உதவ பொறுமை அழைக்கப்படும். பொறுமை அதின் பெலத்தைச் சுய கட்டுப்பாட்டுக்கு ஆதரவாக அளிக்கும். இவைகள் இரண்டின் பெலன்கள் ஒன்றாகக் கூட்டப்படும்போது அந்த திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்றும்படி, அதை ஊக்குவித்த நீதியையும், அன்பையும் உந்தி தள்ளும். இவ்வாறாக நாம் உணர்ந்தோ அல்லது உணராமலோ உருவாக்குகிற திட்டங்கள் எல்லாவற்றையும் நிறைவேற்றுவதற்கு வல்லமை தேவையாயிருக்கும். வல்லமை இல்லாமல் எந்த திட்டத்தையும் செயல்படுத்த முடியாது. ஆகையால் நம்மிடம் குணாம்சத்தின் பெலனாகிய சுய கட்டுப்பாடும், பொறுமையும் இருப்பது மிக அவசிய மானதாகும்.

*22.* நாம் இந்த குணாம்ச பெலனுடையவர்களாக இருப்பதற்கும் அதை உபயோகிப்பதற்கும் மற்ற காரணங்களும் இருக்கின்றன. அது நம்முடைய மற்ற குணநலன் களைப் படிப்படியாகப் பலப்படுத்தும். இந்த குணாம்ச பெலன் இல்லையென்றால் நாம் உறுதியற்றவர்களாக இருப்போம். சாத்தானின் தாக்குதலை எதிர் கொள்ள இது நமக்கு உதவும். மேலும் அவைகளின்மேல் நம்மை வெற்றியடையச் செய்யும். பாவம், தப்பறை, சுயநலம், உலகத்தனம் ஆகியவற்றின் பல்வேறு வடிவங்களைத் தாக்குவதில் வலிய போராட இது நமக்கு உதவும். சுயசித்தத்திற்கும் உலக சித்தத்திற்கும் தொடர்ந்து மரித்திருந்து, தேவனுடைய சித்தத்தை நம்முடைய சொந்த சித்தமாக ஏற்றுக் கொள்வதற்கு இது நமக்கு உதவும். விழித்திருத்தல், ஜெபம், தேவ வார்த்தையைத் தியானித் - தல், அப்பியாசித்தல், பரப்புதல் மற்றும் நம்முடைய சோதனைகள் மற்றும் பரீட்சைகளை விசுவாச உண்மைத் துவத்துடன் சகித்தல் ஆகியவற்றை செய்து, நெருக்கமான பாதையில் நடக்க இது நமக்கு உதவும்.

*23.* நாம் துரைத்தனங்களுக்கும், அதிகாரங்களுக் -கும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளுக்கும், வான மண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளுக்கும் எதிராக யுத்தஞ் செய்கிறோம். ஆகையால் இந்த யுத்தத்தில் நமக்கு, மற்ற காரியங்களுடன், நம்மால் திரட்டக் கூடிய முழு பெலனும் தேவையாயிருக்கிறது. மேலும் இறுதியாக ஜெயங் கொள்ளும் வரை இந்த யுத்தத்தை வெற்றிகரமாக செய்வதற்கு நம்முடைய குணாம்ச பெலத்திற்குத் தேவ வார்த்தை மற்றும் பரிபாலனங்களின் ஆதரவும், சுயகட்டுப்பாடு மற்றும் பொறுமையைத் தவிர பரிசுத்த ஆவியின் மற்ற பகுதிகளின் ஆதரவும் தேவை யாயிருக்கிறது. அது போலவே நமக்கு விரோதமாய் இருக்கும் அனுபவங்களின் மத்தியில் நாம் தோல்வியுறாத படிக்கு நம்முடைய பெலவீனங்களுக்கும் குறைபாடுகளுக்கும் இந்த குணாம்ச பெலன் அளிக்கும் உதவி தேவையாயிருக்கிறது. நாம் இந்த பண்பை அப்பியா - சிக்கும் போது தேவன் நிச்சயமாகக் களிகூருவார். மேலும் அது அவரைக் கனப்படுத்தும். அதற்குக் கூடுதலாக அது பெலவீனமான சகோதரர்களுக்கும் ஆதரவளிக்கும். மேலும் அவர்களுக்கும் பலமுள்ள சகோதரர்களுக்கும் ஒரு நல்ல முன் மாதிரியாக இருக்கும். மேலும் பல நேரங்களில் அது உலகத்தாரின் விமர்சனங்களைத் தடுத்து, அவர்களில் சிலரை ஆசீர்வதிக்கவும் செய்யும்.

## கர்த்தருக்குக் காத்திருப்பதற்காகத் திடமனதாயிருப்பது

*24.* நம்முடைய பாடவசனத்தில் சொல்லப்பட்ட இரண்டாம் புத்திமதியானது (திடமனதாயிரு), முதலாம் புத்திமதியோடு *(கர்த்தருக்குக் காத்திரு)* விசேஷித்த தொடர்புடையதாக இருக்கிறதென்று நாம் இவ்வசன அமைப்பிலிருந்து அறிந்து கொள்கிறோம். அதாவது கர்த்தருக்குக் காத்திருக்கும்போது நாம் திடமனதாயிருக்க வேண்டுமென்று இவ்வசனம் நமக்குப் போதிக்கிறது. அதற்குப்பிறகு, அவருடைய விருப்பத்தை நிறைவேற்று வதிலும் நாம் திடமனதாயிருக்க வேண்டும். அதாவது நம்முடைய காத்திருத்தலுக்கு அளிக்கப்படும் ஆசீர்வாத மாக, அந்த காரியத்தில் அவருடைய சித்தம் என்ன வென்று அவர் நமக்குத் தெளிவுப்படுத்தும்போது, அவருடைய விருப்பத்தை நிறைவேற்றுவதிலும் நாம் திடமன தாயிருக்க வேண்டும்.

*25.* நிச்சயமாக, நாம் கர்த்தருக்குக் காத்திருக்கும் போது, சுயகட்டுப்பாடும் பொறுமையும் அவசியமான வைகளாக இருக்கின்றன. ஏனென்றால் அப்பொழுது தான், நாம் அவசரமாகவும் சரியாகச் சிந்திக்காமலும் செயல்படும்படி, சாத்தான் நம்மைத் துரிதப்படுத்த நாடுவான். ஆகையால் நம்மைத் தவறுகளுக்குள்ளும் தீமைக் குள்ளும் மூழ்கடிக்கச் செய்ய அவனுடைய முயற்சிகளை எதிர் கொள்வதற்கு நாம் நம்முடைய குணாம்ச பெலத்தின் இரு உட்கூறுகளையும் திரட்டுவது தேவையா யிருக்கும். மேலும் ஒருவேளை நாம் பெலவீனத்தினால் அவனுக்கு இடங் கொடுத்து, சிந்திக்காமல் செயல் பட்டால் அவன் நம் கால்களுக்கு வைத்த இந்த கண்ணியிலிருந்து நம்மை மீட்டு கொள்வதற்கு நமக்குச் சுயகட்டுப்பாடும் பொறுமையும் மிகவும் அவசியமான வைகளாகயிருக்கும்.

*26.* நாம் சிந்திக்காது திடீரென செயலில் இறங்கக் கூடிய மனஇயல்புடையவர்களாக இருப்பதால், கர்த்தருக்குக் காத்திராமல், துணிவுடன் செயல்பட்டு, காரியங்களை நம்முடைய கையில் எடுத்துக் கொண்டு, நம்முடைய சொந்த சித்தங்களை நிறைவேற்றுகிறவர் களாக இருந்தால், இந்த இயல்பை எதிர்த்து, அதை மேற் கொள்வதற்கு நமக்குச் சுயகட்டுப்பாடு மற்றும் பொறுமை மிகவும் தேவையாயிருப்பதை நாம் உணருவோம். மேலும் தவறாகச் சிந்திக்கிற சகோதரர்கள், உலகத்தார், குறிப்பாக நம்முடைய குடும்பத்தார் அல்லது உறவினர்கள் ஆகியவர்களின் தாக்கத்திற்கு எளிதாக உட்பட்டு நாம் சிந்திக்காமல் செயல்படும் இயல்புடைய

வர்களாயிருந்தால், இவ்வித ஒரு மனஇயல்பை கட்டுப் படுத்துவதற்கு இந்த குணநலன்கள் அவசியமாயிருப் பதை நாம் காண்போம்.

*27.* ஆகையால் நாம் கர்த்தருக்குக் காத்திருக்கும் போது இந்த இரு குணநலன்களிலும் உறுதியுள்ளவர் களாக இருப்போமாக. ஏனென்றால் கர்த்தருக்குக் காத் திருப்பவர்கள் இந்த சூழ்நிலைகளிலும், மற்றெல்லா சூழ்நிலைகளிலும் ஒருபோதும் அசைக்கப்படுவதில்லை. ஆனால் கர்த்தருக்குக் காத்திருக்கும்போது நாம் திடமன தாயிருப்பது மட்டுமல்ல, காத்திருத்தலின் காலம் முடிந்த பிறகு கர்த்தருடைய சித்தத்தை நிறைவேற்றுவதற்கும் திடமனதாயிருக்க வேண்டும். நாம் எதற்காகக் காத்திருந் தோமோ, அதற்குப் பிறகு எதைக் குறித்து கர்த்தர் தமது சித்தத்தை வெளிப்படுத்தினாரோ, அந்த காரியத்தில் நமக்கு வெளிப்படுத்தப்பட்ட தெய்வீக சித்தம் என்ன வாக இருந்தாலும், நாம் அதை நம்முடைய முழு பெலத்தோடும் செய்ய வேண்டும். சரீர பயிற்சி நம்மைப் பலமுள்ளவர்களாக ஆக்குவதைப் போல் இவ்வித குணாம்ச பயிற்சியும் நம்மைப் பலப்படுத்தும்.

*28.* கர்த்தருக்காகக் காத்திருக்கும் போதும், காத் திருத்தலின் காலம் முடிந்து, கர்த்தர் நமக்கு வெளிப் படுத்தினதைச் செய்யும்போதும் நாம் சுயகட்டுப்பாடு மற்றும் பொறுமையின் பெலத்தை அப்பியாசிக்கையில், தைரியத்துடன் செயல்பட வேண்டும். மற்ற எல்லா பண்புகளும் சமமாக இருக்கும்போது, அதைரியப்படும் ஒரு ஆத்துமா பெலவீனமான ஆத்துமாவாகவும், தைரிய மாக இருக்கும் ஆத்துமா பலமுள்ள ஆத்துமாவாகவும் இருக்கும்.ஆகையால் வெற்றிக்கான நம்பிக்கையிலிருந்து பிறக்கிற தைரியத்தினால் நம்முடைய குணாம்ச பெலன் மேலும் பலப்படுத்தப்படுவதாக. இவ்வாறு பெலப் படுத்தப்படும்போது அது வெற்றியடையும். விசேஷமாக நம்முடைய பாதையில் எதிர்ப்புகளும் இடையூறுகளும் இருக்கும்போது அது வெற்றியடையும்.

*29.* காத்திருக்கும் போதும், அதற்குப் பிறகு செயல்படும் போதும் நாம் திடமனதாயிருப்பதென்பது விசுவாசத்தினாலும் அதிகரிக்கும். ஏனென்றால் நாம் காத்திருக்கும் போதும் செயல்படும்போதும், நம்முடைய விசுவாசம் தேவனுடைய வாக்குத்தத்தங்களைத் தன தாக்கிக் கொள்ளும். மேலும் இந்த வாக்குத்தத்தங் களிலிருந்து, உலகம் கொடுக்கக் கூடாததும், எடுத்துக் கொள்ளக் கூடாததும், புரிந்து கொள்ளக் கூடாததுமான பெலத்தை அடையும். இதுவே உலகத்தை ஜெயிக்கிற ஜெயமாகிய நம்முடைய விசுவாசமாகும். அது மட்டுமல்ல பிசாசின் மேல் ஜெயங் கொள்ளவும் அது நமக்கு உதவும். அவன் எய்யும் அக்கினியாஸ்திரங்களெல்லாம் விசுவாச மென்னும் கேடகத்தால் அவித்துப் போடப்படும். இறுதி யாக, நம்முடைய பெலவீனமான, விழுந்துபோன மற்றும் நம்மை எதிர்க்கும் மாம்சத்தின் மேலும் வெற்றியடைய நம்முடைய விசுவாசம் நம்மை பெலப்படுத்தும்.

*30.* அதுபோலவே சுயகட்டுப்பாட்டுக்கும் பொறுமைக்கும் ஆதரவளிக்கும்படி அன்பு கொண்டு வரப்படும்போது அது நம்மைக் குணாம்ச பெலமுள்ளவர் களாக்கும். நாம் தேவனிடத்தில் அன்பு கூர்ந்தால், நிச்சய மாக அவருக்குக் காத்திருப்போம். நாம் தேவனிடத்தில் அன்பு கூர்ந்தால், நிச்சயமாக அவருக்கு ஊழியஞ் செய்வோம். நிச்சயமாக அவருக்காகக் காரியங்களைச் சகிப்போம். ஏனென்றால் அன்பானது காத்திருத்தலின் ஒவ்வொரு சோதனையையும் இலகுவாக்கும், நாம் செயல்படும்போது எதிர்கொள்கிற ஒவ்வொரு கரடு முரடான பகுதியையும் சமமாக்கும். மேலும் கஷ்டங்கள் மற்றும் இடையூறுகளின் ஒவ்வொரு பாரத்தையும் எளிதாகச் சுமக்கும். இவ்வாறாக அன்பில்லாதிருக்கும் போது நாம் அப்பியாசிக்கும் சுயகட்டுப்பாடு மற்றும் பொறுமையைவிட, அன்புடன் நாம் அப்பியாசிக்கும் சுயகட்டுப்பாடும் பொறுமையும் அதிக பெலமுள்ளவை களாக இருக்கும்.

*31.* கீழ்ப்படிதலின் ஆவியும்கூட குணாம்ச பெல முள்ளவர்களாக இருக்க நமக்கு உதவும். கீழ்ப்படியாமை என்பது, நன்மை செய்வதில் நமக்கிருக்கும் பெலத்தை எப்பொழுதுமே குறைக்கும், தீமை செய்வதில் நமக் கிருக்கிற பெலத்தை எப்பொழுதுமே அதிகரிக்கச் செய்யும். நிச்சயமாக இது சுயகட்டுப்பாடு மற்றும் பொறு மையின் பெலத்திற்கு எதிரிடையானதாகும். கீழ்ப்படி தலின் ஒவ்வொரு செயலும், கட்டுக்கடங்காத தன்மை மற்றும் சிந்திக்காமல் திடீரென செயல்படும் தன்மை என்பவைகளைக் குறைக்கும். நம்முடைய நிலையற்ற தன்மையைக் கட்டுப்படுத்தும் மற்றும் உறுதி *(firmness)* மற்றும் விடாமுயற்சி *(perseverance)* என்ற வடிவங்களில் நம்முடைய குணாம்ச பெலத்தை அதிகரிக்கச் செய்யும். இவ்வாறாக நாம் நம்முடைய தைரியத்தையும் விசுவாசத் தையும் அன்பையும் கீழ்ப்படிதலையும் காத்துக் கொள்ளும்போது திடமனதுள்ளவர்களாயிருப்போம். இப் பொழுது நாம் நம்முடைய பாட வசனத்திலுள்ள இரு புத்திமதிகளைப் பற்றிய ஆய்வை முடித்திருக்கிறோம். இப்பொழுது அதின் வாக்குத்தத்தத்தைக் கருத்தில் கொள்வோம்.

## "அவர் உன் இருதயத்தை ஸ்திரப்படுத்துவார்"

*32.* "அவர் உன் இருதயத்தை ஸ்திரப்படுத்து வார்" என்ற நம்முடைய பாட வசனத்தின் வாக்குத் தத்தமானது, நிபந்தனைக்குட்பட்ட ஒன்றென்பதைக் கவனிப்போம். அந்த நிபந்தனைகளாவன: *(1)* நாம் கர்த்தருக்குக் காத்திருக்க வேண்டும், *(2)* கர்த்தருக்குக் காத்திருக்கும் போதும், பின்பு கிரியை செய்யும்போதும் நம்மிடமுள்ள முழு பெலத்தையும் உபயோகிக்க வேண்டும். நாம் இந்த நிபந்தனைகளை நிறைவேற்றினால் கர்த்தர் நம்முடைய இருதயத்தை ஸ்திரப்படுத்த வாக்குத் தத்தம் செய்கிறார். இவ்வாறாகக் கர்த்தருக்குக் காத்திருப் பவர்களும், அவருக்குக் காத்திருக்கும் போதும், காத்திருக் கும் காலம் முடிந்த பிறகு வெளிப்படுத்தப்பட்ட அவரு டைய சித்தத்தை உறுதியாகச் செய்யும்போதும் தங்களு டைய முழு பெலத்தை அப்பியாசிப்பவர்களுக்கும், இங்கே ஒரு ஆசீர்வாதமான வாக்குத்தத்தம் கொடுக்கப் பட்டிருக்கிறது.

*33.* இங்கே ஸ்திரப்படுத்தப்படுவதாக வாக்குத் தத்தம் செய்யப்பட்ட காரியம் இருதயமென்பதாகும். வேதாகமத்தில் "இருதயம்" என்ற வார்த்தைக்குப் பல அர்த்தங்கள் இருக்கின்றன. முதலாவதாக அது பற்றுதல் களை அர்த்தப்படுத்தும். அடுத்ததாக அது சித்தத்தை அர்த்தப்படுத்தும்.மேலும் அந்த சித்தம் பற்றுதல்களைக் கையாளுவதின் மூலம் அபிவிருத்தி செய்யும் குணநலன் களையும் அர்த்தப்படுத்தும். சில நேரங்களில் அறிவாற்ற லையும் அர்த்தப்படுத்த அது உபயோகிக்கப்படும். சில நேரங்களில் இந்த நான்கு காரியங்களில் இரண்டையோ அல்லது மூன்றையோ அல்லது எல்லாவற்றையும் ஒன்றாக அர்த்தப்படுத்தவும் உபயோகிக்கப்படுகிறது. இருதயமென்ற வார்த்தைக்கு இந்த எல்லா, அர்த்தங்

களும் இருப்பதினாலும், நம்முடைய பாடவசனம் இவைகளில் ஏதேனும் ஒன்றை மட்டுமே அர்த்தப்படுத்துவதாக எவ்வித குறிப்பும் இல்லாததினாலும், நாம் அவைகளெல்லாவற்றையும் தனித்தனியாகவோ அல்லது இணைந்தவைகளாகவோ அர்த்தப்படுத்துவதாக நாம் கருதுவது நலமாயிருக்கும்.

*34.* இவ்வாறாக, கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களையும், அவ்வாறு காத்திருக்கும்போது தங்கள் பெலத்தை அப்பியாசிப்பவர்களையும், அவர் காத்திருந்த காரியத்தைக்குறித்து கர்த்தர் அவர்களுக்கு வெளிப்படுத்தினதைச் செய்யும்போது பெலத்தை அப்பியாசிப்பவர்களையும் தேவன் ஸ்திரப்படுத்துவார் என்பதை இந்த வாக்குத்தத்தம் அர்த்தப்படுத்துகிறது. அதாவது நாம் அவருக்காகக் காத்திருந்து, செயல்படுவது தகுதியாயிருக்கும்போது திடமனதுடன் செயல்படும்போது, நம்மில் ஏற்கனவே இருக்கிற பெலத்திற்கு அவர் இன்னும் அதிக பெலத்தைக் கூட்டுவார். நம்மிடம் ஏற்கனவே இருக்கிற பெலத்தை நாம் அப்பியாசிக்கும் போது அவர் நம்மை ஓரளவிற்கு ஸ்திரப்படுத்துவார். அதற்குப்பிறகு நம்மிடம் இருக்கும் பெலத்தை விட அதிக பெலத்தைக் கூட்டி நம்மை மேலும் ஸ்திரப்படுத்துவார்.

*35.* அது பின்வரும் காரியங்களை அர்த்தப்படுத்துகிறது: *(1)* முதலாவதாக, நம்மிடமிருக்கிற சுய கட்டுப்பாட்டையும் பொறுமையையும் நாம் அப்பியாசிக்கும்போது அவர் அவைகளைப் பெலப்படுத்துவார், அதற்குப்பிறகு அவைகளுக்கு இன்னும் அதிக பெலத்தை அளிப்பதின் மூலம், அவைகளை மேலும் ஸ்திரப்படுத்துவார். *(2)* அறிவு ரீதியாக நம்முடைய பெலத்தை அவர் அதிகரிக்கச் செய்து, நம்மிடம் ஏற்கனவே இருந்த அறிவின்மேலும், அதற்குக் கூட்டப்பட்ட அறிவின் மேலும் நமக்கு இன்னும் உறுதியான மற்றும் இன்னும் அதிகமான புரிந்து கொள்ளுதலை அளிப்பார். *(3)* நம்முடைய பற்றுதல்கள் நியாயமாக்கப்பட்ட மற்றும் பரிசுத்தமாக்கப்பட்ட மனுஷீகத்தின் இன்னும் உயர்வான மற்றும் மேன்மையான காரியங்களை இன்னும் உறுதியாகப் பற்றிக் கொள்ளும்படி செய்வார். *(4)* மூன்று வகுப்புகளைச் சேர்ந்த குணநலன்கள் ஒவ்வொன்றையும் (முதன்மை இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலை குணநலன்கள்) நாம் அப்பியாசிக்கும்போது, அவர் அவைகளெல்லாவற்றையும் அதிகரிக்கச் செய்வார். *(5)* கிறிஸ்தவ வாழ்க்கையின் எல்லா படிகளிலும் அவர் நம்மை ஸ்திரப்படுத்துவார். அதாவது சுயத்தை மற்றும் உலகத்தை வெறுப்பதிலும் விழித்திருத்தலிலும், ஜெபத்திலும், தேவ வார்த்தையைத் தியானிப்பதிலும், பரப்புவதிலும், அப்பியாசிப்பதிலும், யெஷுஆ கிறிஸ்துவின் நல்ல போர் வீரர்களாகப் பாடுகளைச் சகிக்கும் சக்தியிலும் அவர் நம்மை ஸ்திரப்படுத்துவார். இவைகள் எல்லாம் நம்முடைய பாட வசனத்தின் ஆசீர்வாதமான வாக்குத்தத்தத்தில் அடங்கியுள்ள காரியங்களாகவும், அதின் செயல் எல்லைகளாகவும் இருக்கின்றன.

*36.* நம்மிடமிருக்கிற பலம் முழுவதும், நமக்குக் கொடுக்கப்படுகிற பெலன் முழுவதும், நமக்குத் தேவையாயிருக்கிறது. நம்முடைய பெலவீனங்களின் காரணமாக இது நமக்குத் தேவைப்படுகிறது. கிறிஸ்துவின் ஊழியத்தின் மூலம் தேவன் நமக்களிக்கிற பெலத்தினால் ஆதரிக்கப்படாவிட்டால், நம்மில் அதிக பெலனுள்ளவர்களும் கூட பெலவீனர்களாகவும், நிலை நிற்க இயலாதவர்களாகவும் இருப்போம். ஆகையால் ஜெயங் கொள்வதற்குப் பரிசுத்த பவுலுக்கும்கூட இந்த கூட்டப்பட்ட பெலன் தேவையாயிருக்கிறது. மேலும் யெஷுஆ எப்பொழுதும் அவரோடிருந்து தொடர்ந்து அவரை ஸ்திரப்படுத்தினார். இதற்கிணக்கமாகக் கர்த்தராகிய யெஷுஆ அவரிடம் சொல்லியிருந்ததாவது: *“என் கிருபை உனக்குப்போதும்; பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும்” (2கொரி. 12:9).* அதாவது அவருடைய பெலன் நம்முடைய பெலவீனங்களை நிறைவாக்கும், நம்முடைய பெலவீனங்களுக்கு ஈடுசெய்யும். மிக அதிகபெலமுள்ள சகோதரர்களுக்குத் தேவன் கூடுதலாக அளிக்கிற இந்த பெலன் தேவையாயிருப்பதைப் போலவே, மிக அதிக பெலவீனமான சகோதரர்களுக்கும் அது தேவையாயிருக்கும். ஏனென்றால் அவர்கள் அனைவரிலும் குறைபாடுகளும், தவறுகளும், பெலவீனங்களும் இருக்கின்றன. அவர்கள் தேவனுடைய பார்வையில் பூரணர்களாகக் கருதப்படும்படி அவர்களுடைய கணக்கில் எழுதப்படும் பலி புண்ணியத்தினால் இந்த பெலவீனங்கள் நிறைவாக்கப்படுவது அவசியமாயிருப்பது மட்டுமல்ல, நெருக்கமான பாதையில் தொடர்ந்து முன்னேறுவதற்குத் தேவையான பெலன் உண்மை நிகழ்வாக அளிக்கப்படுவதும் அவசியமாயிருக்கிறது.

*37.* நம்மிடம் ஏற்கனவே இருக்கிற பெலத்தை நாம் அப்பியாசிப்பதின் இயற்கையான விளைவாக நாம் மேலும் பலப்படுத்தப்படுகிறோம். இதற்குக் கூடுதலாகத் தேவன் நமக்கு அதைவிட மிக அதிகமான பலத்தை அளிக்கிறார். இவ்வாறு கூட்டப்பட்ட அதிக பலம் நமக்கு அவசியமானதாக இருக்கிறது. ஏனென்றால், நாம் மிகவும்பெலவீனர்களாக இருக்கிறோம். அதுமட்டுமல்ல நாம் நடக்கிற நெருக்கமான பாதை கஷ்டங்கள் நிறைந்ததாக இருக்கிறது. ஒரு வேளை நம்மிடம் எவ்வித பெலவீனங்களும் இல்லையென்றாலும், நம்முடைய திராணிக்கு மிஞ்சி சோதிக்கக் கூடிய பாரமான கஷ்டங்கள் நெருக்கமான பாதையிலிருக்கின்றன. எவ்வித பெலவீனமுமில்லாத யெஷுஆவின் காரியத்தில் அது அவ்வாறிருந்தது. அந்த பாதையில் நடப்பது அவருக்கே கடினமாக இருந்த போது, பெலவீனங்கள் சூழ்ந்திருக்கிற நமக்கு அதில் நடப்பது கடினமாயிருக்குமென்பது நிச்சயம். நாம் அதில் நடப்பதற்குப் பிசாசு, உலகம், மாம்சம் ஆகியவைகளிலிருந்து ஒரு வேளை எவ்வித இடையூறுகள் வரவில்லையென்றாலும் கூட, வெற்றிகரமாக அதைக் கடந்து செல்வதும் நமக்குக் கடினமாயிருக்கும். ஏனென்றால் சுயவெறுப்பு, உலக வெறுப்பு, விழித்திருத்தல், ஜெபம், சத்தியத்தைத் தியானிப்பது, பரப்புவது, அப்பியாசிப்பது, சோதனைகளை விசுவாச உண்மைத்துவத்துடன் சகிப்பது என்பவைகளே அந்த பாதையில் மேற்கொள்ள வேண்டிய கஷ்டங்களாக இருக்கும்.

*38.* இவைகளுக்குக் கூடுதலாக, நெருக்கமான பாதையை அதிகமாகவோ குறைவாகவோ சூழ்ந்திருக்கிற இழப்புகள், ஏமாற்றங்கள், தாமதங்கள், கட்டுப்பாடுகள், உபயோகிக்கப்படாமல் ஒதுக்கி வைக்கப்படுதல், நம்முடைய மற்றும் மற்றவர்களுடைய தவறுகளும் தனி இயல்புகளும், கஷ்டங்கள், தேவைகள், எதிர்ப்புகள், தவறாகப் புரிந்து கொள்ளப்படுதல், பிரிவினைகள், கொழித்தல்கள், காரணமில்லாமல் ஐக்கியத்திலிருந்து விலக்கப்படுதல், கள்ள சகோதரர்கள், தள்ளி வைக்கப்படுதல், பகைமைகள், சோதனைகள், தவறாகச் சித்தரிக்கப்படுதல், சோர்வு, நோய், வலி, துக்கம், பாடுகள், கண்டனங்கள், தூஷணங்கள், துன்புறுத்தல்கள், மரண செயல்முறை ஆகியவற்றினால் நம்முடைய பாதையின் ஒவ்வொரு படியிலும் நமக்கு வருகிற சோதனை மயமான அனுபவங்களைக் கூட்டும்போது, அந்த பாதை இன்னும்

எவ்வளவு கடினமானதாக ஆகுகிறது! இந்த கஷ்டங்களினால் நம்மிடம் ஏற்கனவே இருக்கிற பெலத்திற்குக் கூட்டப்பட்ட பெலத்தை நாம் பெற்றுக் கொள்வது அவசியமாயிருக்கிறது. கர்த்தருக்காகக் காத்திருந்து அவருக்காகத் திடமனதாயிருப்பவர்களுக்குத் தேவையான இந்த பெலத்தையே அளிக்க தேவன் வாக்குத்தத்தம் செய்கிறார். இதுவே அவர் வாக்குத்தத்தம் செய்கிற போதுமான கிருபையாகும்.

## கர்த்தர் நமக்கு இந்த கூடுதலான பெலத்தை அளிக்கும் வழிகள்

*39.* நாம் ஏற்கனவே அறிந்திருக்கிற அதே மூன்று வழிகளில் கர்த்தர் நமக்கு இந்த கூடுதலான பெலத்தை அளிக்கிறார். அந்த மூன்று வழிகள், தேவ வார்த்தை, பரிசுத்தாவி மற்றும் தேவனுடைய பரிபாலனங்கள் என்பவைகளாகும். ஏனென்றால் இவைகளே தேவனுடைய கிருபை நமக்கு அளிக்கப்படுவதற்கான மூன்று மேன்மையான வழிகளாக இருக்கின்றன.

*40.* இவைகளில் முதலாவது தேவ வார்த்தையாகிய சத்தியமென்பதாகும். முதலாவதாக, எவ்விதமான பெலத்தைத் தேவன் நமக்களிக்க விரும்புகிறார் என்பதைக் குறித்து தேவவார்த்தை நம்மை பிரகாசிப்பிக்கும். *(1)* மேலும் தேவ வார்த்தையிலிருந்து அந்த பிரகாசிப்பித்தலை நாம் எவ்வாறு பெற்றுக் கொள்ள வேண்டுமென்பதையும் நமக்குத் தெரிவிக்கும். இவ்வாறாக அந்த பெலத்தில் முதலாவதாக, சித்தத்தின் வல்லமையாகிய சுயகட்டுப்பாடு மற்றும் பொறுமை என்பவைகளும், அடுத்ததாக அறிவாற்றல், பற்றுதல்கள் மற்றும் குணநலன்களின் வல்லமையும் அடங்கியிருக்கின்றனவென்று அவர் நமக்குக் காண்பிக்கிறார். *(2)* அதற்குப் பிறகு, நாம் அவைகளைத் தேவ வார்த்தையிலிருந்து எவ்வாறு பெற்றுக் கொள்ள வேண்டுமென்பதையும் காண்பிக்கிறார். அதாவது இந்த பெலத்தை அபிவிருத்தி செய்வது சம்பந்தப்பட்ட எல்லா செயல்முறைகளிலும், நம்முடைய நோக்கங்கள், சிந்தனைகள், வார்த்தைகள் மற்றும் செயல்களில் பெலத்தை உருவாக்கும் தேவ வார்த்தையின் பகுதிகளுக்கு நம்முடைய மனதையும் இருதயத்தையும் சித்தத்தையும் கீழ்ப்படுத்துவதின் மூலம் நாம் தேவ வார்த்தையிலிருந்து இந்த பெலத்தைப் பெற்றுக் கொள்ளக் கூடும். *(3)* இறுதியாக நாம் ஏன், எப்பொழுது, எவரிடமிருந்து, எங்கே இந்த அறிவை கற்றுக் கொள்ள வேண்டுமென்று அவர் நமக்குக் காண்பிக்கிறார். இவ்வாறாக நாம் ஸ்திரப்படுத்தப்படுவதற்குத் தேவையான எல்லா அறிவையும் தேவ வார்த்தையிலிருந்து பெற்றுக் கொள்கிறோம்.

*41.* நம்மிடம் ஏற்கனவே இருக்கிற பெலத்தின் இயற்கையான விளைவாக அதிக பெலத்தைப் பெற்றுக் கொள்வதற்காக, நம்மிடம் ஏற்கனவே இருக்கிற பெலத்தை அப்பியாசிப்பதற்கு நமக்குத் தேவையான எல்லா உற்சாகத்தையும் ஊக்கத்தையும் அதே வார்த்தை அளிக்கும். தேவ வார்த்தை நமக்களிக்கிற அறிவின் மூலம், நம்மிடம் ஏற்கனவே இருக்கிற பெலத்தை அப்பியாசிப்பதற்கு நம்மைத் தூண்டும் நோக்கங்களை அளிப்பதின் மூலம் தேவ வார்த்தை அதைச் செய்கிறது. இறுதியாக நம்மிடம் ஏற்கனவே இருக்கிற பெலத்தை நாம் அப்பியாசித்து, அதின் இயற்கையான விளைவாக இவ்வாறு பெலப்படுத்தப்பட்ட பிறகு, தேவ வார்த்தையிலுள்ள சக்தியின் மூலமும், அது அளிக்கக் கூடிய சக்தியின் மூலமும் நமக்கு புது பெலனை அளிக்கும். இவ்வாறாக நாம் கர்த்தருக்குக் காத்திருந்து, நம்மிடம் ஏற்கனவே இருக்கிற பெலத்தை அப்பியாசிக்கும்போது, தேவ வார்த்தையின் மூலம் அவர் நம்மை ஸ்திரப்படுத்துவார்.

*42.* தேவன் தம்முடைய ஆவியின் மூலமும் நம்மை ஸ்திரப்படுத்துகிறார். ஆனால் இங்கே ஆவி என்று சொல்லும்போது நாங்கள் தேவனுடைய வல்லமையாகிய பரிசுத்த ஆவியை அர்த்தப்படுத்தவில்லை. ஏனென்றால் வல்லமை என்ற கருத்தில் அது தேவ வார்த்தையிலுள்ள சக்தியாகும். தேவ வார்த்தையின் ஸ்திரப்படுத்தும் அலுவலைக் குறித்து முந்தைய பத்தியில் பார்த்தோம். நம்மை ஸ்திரப்படுத்துவதற்குத் தேவன் உபயோகிக்கிற வழியாகப் பரிசுத்த ஆவி என்ற வார்த்தையை உபயோகிக்கும் போது, நம்மிலுள்ள தேவனுடைய மன இயல்பை அர்த்தப்படுத்துகிறோம். அதில் அடங்கியுள்ள காரியங்களாவன: *(1)* புதிய சித்தம், *(2)* நாம் பிரதிஷ்டை செய்யும் போது நம்மில் அவருடைய சாயலைப் புதுப்பிக்க தேவன் தொடங்கும்போது அவர் நமக்களிக்கிற பரிசுத்தமான திறமைகள், *(3)* நம்முடைய புதிய சித்தம் மேலே சொல்லப்பட்ட பரிசுத்த திறமைகளை அப்பியாசிப்பதின் மூலம் அவர் நம்மில் அபிவிருத்தி செய்கிற குணாம்சம். இவ்வாறாக இந்த மூன்று கருத்துகளில் தேவன் அளிக்கிற பரிசுத்த ஆவியின் மூலமும், நம்முடைய செயல்பாட்டின் மூலமும் (அப்பியாசித்தல்) அவர் நம்மை ஸ்திரப்படுத்துகிறார். மேலும் பரிசுத்த ஆவியை இவ்வாறு அப்பியாசிப்பதற்குத் தேவையான பிரகாசிப்பித்தலையும் சக்தியையும் தேவ வார்த்தை அளிக்கும்.

*43.* இறுதியாக, தேவனுடைய பரிபாலனத்தின் மூலம் அவர் தம்முடைய ஜனங்களை ஸ்திரப்படுத்துகிறார். அதாவது தேவ வார்த்தையினால் பிரகாசிப்பிக்கப்பட்டு, ஊக்குவிக்கப்படுகிற நம்முடைய பரிசுத்த ஆவியின் அப்பியாசித்தலைக் கோரும் அனுபவங்களின் மத்தியில் நம்முடைய மனதையும், இருதயத்தையும், குணநலன்களையும், சித்தத்தையும் அப்பியாசிப்பதற்குத் தேவையான சந்தர்ப்பங்களை நமக்களிக்கும் சூழ்நிலைகளைத் தேவன் உருவாக்குகிறார். அவைகளின் மத்தியில் நாம் பரிசுத்த ஆவியை அப்பியாசிக்கும் போது, தேவனுடைய அபரிமிதமான ஆசீர்வாதங்களின் பொக்கிஷத்திலிருந்து இயற்கையாகவும் கூட்டப்பட்ட விதத்திலும் பெலத்தைப் பெற்றுக் கொள்கிறோம்.

*44.* நம்முடைய இருதயங்களை ஸ்திரப்படுத்துவதில் தேவன் பரிசுத்த மகிழ்ச்சியைக் கொள்கிறார். பூமிக்குரிய ஒரு தகப்பன் தன் பிள்ளைகளிடம் அன்பு கூருவதைக் காட்டிலும் அதிகமாகவும், சிறப்பாகவும், ஞானமாகவும் தேவன் நம்மிடத்தில் அன்பு கூருகிறார். கல்வியிலும் வியாபாரத்திலும் தங்கள் பிள்ளைகள் செழிப்படையும்போது பெற்றோர்கள் எவ்வளவு சந்தோஷப்படுவார்கள் என்பதை நாம் அறிவோம். உயர்நிலைப் பள்ளியிலிருந்தும் கல்லூரியிலிருந்தும் பல்கலைகழகத்திலிருந்தும் தங்கள் பிள்ளைகள் பட்டத்தைப் பெறும் போது பெற்றோர்கள் எவ்வளவாய் மகிழ்வார்கள்! பிள்ளைகள் தங்கள் வேலையில் உயர்வடையும் போது பெற்றோர்கள் எவ்வளவாய் களி கூருவார்கள்! ஆனால் நம்முடைய அழைப்பில் நாம் ஜெயங்கொள்வதைக் குறித்து தேவன் வாஞ்சிக்கிற இனிமையான நம்பிக்கைகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, பூமிக்குரிய பெற்றோர்களின் இனிமையான நம்பிக்கைகள் மிகவும் சிறியவைகளாக இருக்கின்றன. நம்முடைய அழைப்பில் நாம் அடைகிற ஒவ்வொரு வெற்றியிலும்

அவர் பெரிதும் மகிழ்கிறார். நாம் நம்முடைய அழைப்பில் இறுதியாக வெற்றியடையும் போது அவர் ஈடற்ற உச்ச நிலையில் களிகூருவார்.

*45.* தேவன், தீய எண்ணத்துடன் நம்மைத் தண்டிப்பதற்காக நம்மில் ஏதேனுமொரு தவறைக் கண்டு கொள்ள விரும்புகிற ஒரு ஆளோட்டி அல்ல. பூமிக்குரிய தகப்பன்களை விட மிக அதிகமாக அன்பு கூருகிற ஒரு தகப்பனாக இருப்பதால், நாம் இடறும்போது அவர் வேதனை அடைகிறார். பூமிக்குரிய தகப்பன்களைவிட மிக அதிகமாக அன்பு கூருகிற ஒரு தகப்பனாக இருப்பதால், நாம் வெற்றியடையும்போது அவர் பெரிதும் மகிழ்கிறார். நம்முடைய போராட்டங்களில் நமக்குக் கிடைக்கிற தனிப்பட்ட வெற்றிகளிலும், முழு யுத்தத்தில் நம்முடைய இறுதியான வெற்றியிலும் நாம் முன்னேற்ற மடையும் படிக்கு அவருடைய அறிவு, அன்பு மற்றும் வல்லமையின் மா உன்னத திறமைகளை உபயோகிக்க நமக்கு அருள் செய்கிறார். நம்முடைய போராட்ட கால முழுவதும் அவர் நம்முடைய வெற்றியை ஆர்வமாக வாஞ்சிக்கிறார். ஆகையால் நாம் அவருக்குக் காத்திருக் கும்போதும், காத்திருத்தலின் காலத்திலும், அதற்குப் பிறகும் பெலத்தை அப்பியாசிக்கும்போதும் நம்மை ஸ்திரப்படுத்துவதில் அவர் களிகூருகிறார். அவருக்காகக் காத்திருப்பதற்கும், அவ்வாறு காத்திருக்குபோதும், அதற்குப் பிறகும் அவருக்காக நம்முடைய பெலத்தை அப்பியாசிப்பதற்கும் இந்த கருத்துக்கள் நம்மை ஊக்கு விப்பதாக. மேலும் ஒவ்வொரு காரியத்திலும் வெற்றி யடையும் படிக்கும், இறுதியாக ஜெயங் கொள்ளும் படிக்கும் நம்முடைய இருதயங்களை ஸ்திரப்படுத்து வதின் மூலமும், மரணத்தின்மேல் நமக்கு வெற்றியளிப் பதின் மூலமும் அவர் மிக நிச்சயமாக நமக்கு பிரதிகிரியை செய்வார்!

★★★★★★★★★★★★★★★★★★★★★★

# நீங்கள் அமர்ந்திருந்து, நானே தேவனென்று அறிந்துகொள்ளுங்கள்

*சங். 46:10*

***உங்கள் கவனத்திற்கு***

சில கட்டுரை பகுதிகள்,
நமது அழைப்பிற்கும்,
இதுவரை கிடைத்த நிகழ்கால சத்தியத்திற்கும்
இணங்க, மாற்றம் செய்யப்பட்டுள்ளது

## பெங்களூரு கன்வென்ஷன்

**கர்த்தருக்குச் சித்தமானால்**
*"மில்லினிய வேதாகம சத்திய இயக்கத்தின்"*
**சகோதர ஐக்கியக் கூட்டம் , பெங்களூரில்**
**ஆகஸ்ட் மாதம் *8,9,10* தேதிகளில்**
**(வெள்ளி, சனி, ஞாயிறு ) நடைபெறும்.**
**"தாகமாயிருக்கிறவன் வரக்கடவன்**
**விருப்பமுள்ளவன் ஜீவதண்ணீரை**
**இலவசமாய் வாங்கிக்கொள்ளக்கடவன்"**



**நமது**
## கர்த்தராகிய யெஷுஆவின் ஞாபகார்த்தத்தை
## *2025* ஏப்ரல் மாதம் 10-ம் தேதி வியாழக்கிழமை
**மாலை *6* மணிக்குப் பின்பு**
**ஆசரிப்போமாக**

## "என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள்"

**புது உடன்படிக்கை**
*Monthly newsletter published by the brethren of the*
*Millennial Bible Truth Movement*
*Website: www.mbtm.in*

# மில்லினிய வேதாகம சத்திய சகோதரர்களின் ஐக்கிய கூட்டம்
## புதுச்சேரி கன்வென்ஷன் - ஜனவரி 2025

ஒன்றான மெய் பிதாவாகிய யாவே தேவனுடைய கிருபையால், நமது மில்லினிய வேதாகம சத்திய இயக்கத்தின் ஐக்கிய கூடுகையானது இந்த வருடம் ஜனவரி மாதம், 24,25மற்றும் 26 ஆகிய மூன்று நாட்களில், புதுச்சேரி, காலப்பட்டிலுள்ள *Cluny Prashant Vanam, Community hall*-ல் நடைபெற்றது.

*24ஆம் தேதி:* வரவேற்பு & ஆரம்ப ஜெபம் *- Br.AT,* மற்றும் முடிவு ஜெபம்,ஆசீர்வாதம்; *- Br.YR.*
*25ஆம் தேதி:* ஆரம்ப ஜெபம் *- Br.PM* மற்றும் முடிவு ஜெபம்,ஆசீர்வாதம் *- Br.SK.*
*26ஆம் தேதி:* ஆரம்ப ஜெபம் *- Br.MX* மற்றும் முடிவு ஜெபம்,ஆசீர்வாதம்; *- Br.GT*
சகோ. ராயப்பன், சகோ. மகிமைதாஸ் மற்றும் சகோ. பீட்டர் ஆகியோர் காலைத்தீர்மானம் மற்றும் விசேஷித்த பொருத்தனையை வாசித்தார்கள்.

| Discourse No. | Discourse topic | Reference | Duration | Discourse delivered by |
|---|---|---|---|---|
| | 24.01.25 | | | |
| D1 | மன்னா – 1கொரி.6:19.20 | DHM- Jan. 2 | 45 min | Br.AB |
| D2 | ஆவிக்குரிய வளர்ச்சி | R4808, page 134, 1911 | 60 min | Br.PM |
| D3 | ஈடுபலி - பாகம்-1 | E Vol.15, Chap.IV | 90 min | Br.GL |
| D4 | தெளிந்த புத்தியின் ஆவி | PT# 634, July-Aug 1991 | 60 min | Br.NJ |
| D5 | ஈடுபலி - பாகம்-2 | E Vol.15, Chap.IV | 90 min | Br.AT |
| D6 | ஈடுபலி - பாகம்-3 | E Vol.15, Chap.IV | 90 min | Br.DB |
| D7 | இளம்பிராயத்தில் சந்திக்கின்ற கடினமான சூழ்நிலைகள் | BS# 596, Nov 1985 | 75 min | Br.SK |
| | 25.01.25 | | | |
| D8 | மன்னா – மத்தேயு 6:34 | DHM- Jan 25 | 45 min | Br.TE |
| D9 | மனுகுலம் பூமியை நிரப்பும் | PT# 658, July-Aug 1995 | 60 min | Br.YR |
| D10 | ஈடுபலி - பாகம்-4 | E Vol.15, Chap.IV | 90 min | Br.GL |
| D11 | கிறிஸ்துவின் சிலுவையில் நான் களிகூருகிறேன் | R3900, Pg.375,1906 | 60 min | Br.AD |
| D12 | ஈடுபலி - பாகம்-5 | E Vol.15, Chap.IV | 90 min | Br.AT |
| D13 | ஈடுபலி - பாகம்-6 | E Vol.15, Chap.IV | 90min | Br.DB |
| D14 | ஒருமித்து வாசம் பண்ணுவது | PT# 338, Jan 1947 | 75 min | Br.GT |
| | 26.01.25 | | | |
| D15 | மன்னா – சங்கீதம் 119:9 | தீயபழக்கங்களை மேற்கொள்ளுதல் | 45 min | Br. GL |
| D16 | ஈடுபலி - கருத்தாராய்வு பாடம் -சுருக்கம் | E Vol.15, Chap.IV | 60 min | Br.DB |
| D17 | உலகத்தில் அன்புக்கூராதிருங்கள் | R4765,Pg.56,1911 | 60 min | Br.TR |
| D18 | நம்முடைய புறம்பான மனுஷன் மற்றும் உள்ளான மனுஷன் | PT# 279, Feb, 1942 | 60 min | Br.LG |

இந்த ஐக்கிய தியானங்களில் ப்ரான்ஸ் சகோதர, சகோதரிகள் மற்றும் புதுச்சேரி, கோவா, திருச்சி, திருவள்ளூர், கோயம்புத்தூர், பெங்களூரு, துபாய் , சௌதி அரேபியா, லண்டன் மற்றும் ஜெர்மனி ஆகிய இடங்களிலிருந்தும் சகோதர, சகோதரிகள் *Skype* மூலம் கலந்துகொண்டனர். தேவனுடைய மேலான பரிபாலன வழி நடத்துதலுக்காக ஸ்தோத்திரம்.